# உதயசூரியன்

UTHAYA SURIYAN

விலை ரூபா 1-00

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கதிர் 1 | திருவள்ளுவராண்டு 2011 | 3-4-81 | வெள்ளிக்கிழமை | ஒளி 27


UNIVERSITY OF SRI LANKA RECEIVED 1981 PERIODICALS DIVISION LIBRARY

தமிழர் தம் தாயகத்தை மாற்றார் ஊடுருவலிருந்து பாதுகாக்கவும் -- தமிழ் மொழி பண்பாட்டைப் பேணி வளர்க்கவும் பொருளாதரர வளத்தை போதிய அளவு ஏற்படுத்தவும் மாவட்ட சபை அமைப்பு வழிவகுக்கும்.

--பேராசிரியர்
ஏ. ஜே. உவில்சன்

# கிழக்கு சிவக்கின்றது!

## துரோகமேகங்கள் ஓடி மறைகின்றனை!

தமிழீழப் போராட்டத்தின் தளநாயகன்- தந்தை செல்வாவின் அரசியல் வாரிசு- தலைவர் அமிர் அவர்களையே ஏக தலைவனுக ஏற்றுக் கொண்டிருக்கும் தமிழீழத்தின் ஒரு பகுதியாம் கிழக்கிலங்கை மீண்டும் சிவக்கத் துவங்கி விட்டது. அதன் அடிவானத்தில் அப்பியிருந்த துரோகக் கருமேகங்கள் அலறிப் புடைத்துக்கொண்டு ஓட- ஆதவன் அங்கே உதயமாகிவிட்டான்.

ஆதிக்க சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளாக அமைச்சர்கள் தேவநாயகமும் இராசதுரையும் மாறியதனுல் ஏற்பட்ட அவமானத்தைத் துடைத்தெறிந்தே தீருவோம் என சூள் உரைத்து தனது ஒளிக் கிரணங்களால் உலகெலாம் ஆட்சி செய்யும் உதயசூரியன் அந்தப் பூமியிலே பொங்கிப் பிரவாகிக்கத் துவங்கி விட்டான்.

சுய நலத்துக்காகச் சோரம் போனவர்கள்- தமிழினத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் தலைவனின் முதுகில் குத்தி வீழ்த்திவிட்டு- இனத்தை இடுகாட்டிற்கு இட்டுச் செல்லத் துடியாய்த் துடிப்போர்- அள்ளி வீசிய சேற்றை கறையைக் கழுவ நான் தயார் என்று சொல்வது போல் தோன்றும் உதயசூரியனின் உலா அங்கே ஆரம்பமாகி விட்டது.

அங்குலம் அங்குலமாகப் பறி போய்க்கொண்டிருக்கும் தமிழ் மண்ணைக் காக்கவே- அபிவிருத்திச் சபையை ஏற்றுக் கொண்டோம் என்றும் முழக்கம் கேட்கும் அந்த மண்ணில் 1977-ல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தயவால் தனது அரசியல் அந்தஸ்தை காப்பாற்றிக் கொண்ட இராசதுரையின் எழில் தமிழும்- தேவநாயகத்தின் பிரதேச வெறியும் இனிமேல் எடுபடப் போவதில்லை.

எத்தனையோ பழிவாங்கல்களையும் இன்னல்களையும் யு. என். பி. அமைச்சர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மீது ஏவிவிட்டபோதும் இம்மியளவும் இலட்சியத்திலிருந்து பிறழாத அவ்விடுதலை வீரர்கள்- தலைவர் அமிரின் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு உதயசூரியன் கொடியின் கீழ் இப்போதே அணிவகுக்கத் துவங்கிவிட்டனர்.

இன்பத் தமிழை தங்களது இருவிழிகளெனப் போற்றும்

(8-ம் பக்கம் பார்க்க)

## தொழிற்சங்கத் துவக்க விழா

கற்குடாத் தொகுதியைச் சேர்ந்த கோ. ப. வடக்கில் உள்ள தொழிலாளர் நலன் காக்கும் பொருட்டு, தொழிலாளர் முன்னேற்றப் பேரவை என்ற அமைப்பின் துவக்க விழா மே மாதம் 1ம் திகதி வாகரையில் நடைபெற விருக்கின்றது.

அப்பகுதித் தொழிலாளரின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாக அமையப் போகும் மேற்படி பேரவையின் துவக்க விழாவைச் சிறப்பாகக்கொண்டாட எல்லாவித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## வேலைவாய்ப்பின் இலட்சணம்!

✲ இந்த அரசு தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதியைப்பேல வேறு எந்தஅரசும் இழைக்கவில்லை. 3 இலட்சம் பேருக்கு வேலை வழங்கியுள்ளதாக அரசாங்கம் பெருமையடித்துக் கொள்கிறது. இதன் விகிதாசாரப்படி 60 ஆயிரம் தமிழர்களுக்கு வேலை வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனல் 5 ஆயிரம் பேருக்குமட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது.

— தலைவர் அமிர்

(வவுனியாக் கிராம யாத்திரைக் கருத்தரங்கில்)

## கூட்டணி செயற்குழுக் கூட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழுக் கூட்டம் 9-4-81 காலை9 மணிக்கு எதிர்க் கட்சித்தலைவரின் கொழும்பு இல்லத்தில் நடைபெறும்.

## உதயசூரியன் ஊக்கமளிக்கிறது

தாங்கள் அனுப்பும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியக் குரலான உதயசூரியன் இதழ்களும் தனிப்பட்ட முறையில் எழுதும் கடிதங்களும் இங்குள்ள தோழர்களிடையே மிகுந்த ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தருகின்றன.

இப்படி- உதயசூரியன் ஆசிரியருக்குச் கடிதம் எழுதியுள்ளார் புதுவை மாநில தமிழ் ஈழத் தோழமைக்கழகத் தலைவரும் தமிழீழ விடுதலைப் போராளிகளில் ஒருவருமான தோழர்- திரு. மு. வேந்தன் அவர்கள்!

## ஒளி அணைந்தது!

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவரும், சிந்தனையாளரும், கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் 31-3-81 ல் சென்னையில் தமது 57-வது வயதில் அமரத்துவமானுர்.

1965-ம் ஆண்டு கோப்பாய்த் தொகுதியிலிருந்து தமிழரசுக்கட்சியின் சார்பில் தெரிவுசெய்யப்பட்ட திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்கள், தமது இறுதிமூச்சுவரை தமிழீழத்தின் விடுதலைக்காகவே உழைத்தார்.

அன்னரது பிரிவு, ஈழத் தமிழினத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிளப்பாகும்.

அமரரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

## முல்லைத்தீவில் உதயசூரியன் நிருபர்

முல்லைத்தீவுசெல்வபுரத்தைச் சேர்ந்த திரு. மார்க்குப்பிள்ளை குணரத்தினம் அவர்கள் நமது 'உதயசூரியன்' வார இதழின் நிருபராக (முல்லைத்தீவுமாவட்டத்திற்கு) தொகுதி உறுப்பினர் திரு. சே. மா. செல்லத்தம்பு அவர்களின் சிபார்சின் பேரில் 1-4-81 முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. மா. குணரத்தினம் அவர்கள் இயக்கத்தின் நீண்டநாள் உறுப்பினரும் தீவிர ஆதரவாளருமாவார்.

## மணிலா மாநாட்டிலும் தமிழர் பிரச்சனை எதிரொலிக்கும்!

பிலிப்பைன்ஸ் தலைநகரான மணிலாவில் ஏப்பிரல் மாதம் 20-ம் திகதி ஆரம்பமாக இருக்கும் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாட்டில் ஈழத் தமிழர் பிரச்சனைகள் எதிரொலிக்கவிருக்கின்றன. இது தொடர்பாக இரண்டு விடயங்கள் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளன.

கியூபா நாட்டின் தலைநகரான ஹவானுவில் இவ்வருட இறுதியில் நடைபெறவிருக்கும் சர்வதேச பாராளுமன்ற வருடாந்த மாநாட்டுக்குச் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பிரேரணைகளை ஆராய்வதே மணிலா மாநாட்டின் நோக்கமாகும்.

இம்மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் அமிர் அவர்களும், சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் அவர்களும் கலந்துகொள்கின்றுர்கள்.

## ஆசிரியரின் அரசியல் விளையாட்டு!

அமைச்சர் தேவநாயகத்தின் ஆட்சி நடக்கும் கற்குடாத் தொகுதியைச் சேர்ந்த பனிச்சங்கேணிக் கிராமத்தில் உள்ள பாடசாலையில் படிப்பிக்கும் ஆசிரியர் ஒருவர் அவ்வூரில் யு. என். பி. சார்பான பிரச்சாரத்தில் பகிரங்கமாகவே ஈடுபட்டு வருகின்றுர். இதன்முன்னேடியாக 1-4-81ல் நடைபெற்ற பனிச்சங்கேணி கி. அ. சங்கத் தேர்தலில் யு. என். பி. யின் வெற்றிக்காக அவர் பாடுபட்டதைக் காணக் கூடியதாகவிருந்தது.

தனது ஆசிரியர் பணிக்கு மாசு ஏற்படும் வகையில் அவ்வூர் அரசியல் பிரச்சனைகளில் இந்த ஆசிரியர் ஈடுபட்டுவருவதால் மக்கள் பெரிதும்கொதிப்படைந்துள்ளனர்.

இதே ஆசிரியர் கதிரவெளி என்ற கிராமத்தில் படிப்பிக்கும்போதும் யு. என். பி. சார்பான கூட்டமொன்றில் அக்கிராமத்து மக்கள் புண்படும் விதத்தில் பேசியதால், ஊரை விட்டே வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது இங்கு குறிப்பிடத் தக்கது.

## உள்ளே....

அபிவிருத்திச்சபை அமைப்புப் பற்றி அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் உயர்திரு ஏ. ஜே. வில்சன் அவர்கள் எழுதிய ஆய்வுக்கட்டுரை இடம் பெறுகிறது.

தமிழ் ஈழம் தமிழர் தாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழக் கோரிக்கையின் சாரமே

# மாவட்ட அபிவிருத்திச்சபை!

இலங்கையில் உள்ள மாவட்டங்கள் அனைத்திலும் விரைவில் இயங்கவிருக்கும் அபிவிருத்திச் சபையின் அமைப்புப்பற்றி பேராசிரியர் ஏ. ஜே. உவில்சன் அவர்கள் எழுதிய ஆய்வுக் கட்டுரையே இங்கே வெளியிடப்படுகின்றது.

கனடா நியூபிரன்ஸ்விக் பல்கலைக்கழகத்தில், அரசியல் விஞ்ஞானப் பேராசிரியராகப் பணியாற்றும் உயர்திரு. ஏ. ஜே. உவில்சன் அவர்கள் தமிழீழத் தந்தை செல்வாவின் மருமகனுமாவார்.


## பேராசிரியர் ஏ. ஜே. உவில்சன்,

பி. எச். டி., டி. எஸ். சி.

(கனடா நியூ பிரன்ஸ்விக் பல்கலைக்கழக அரசியல், விஞ்ஞானப் பேராசிரியர்)

தமிழாக்கம்: "தாமரை"


தீணைநிலைச் சட்டங்களை ஆக்குவதற்குரிய அதிகாரங்களைப் பிரதேச அரசாங்கங்களுக்குப் பரவலாக்கும் கொள்கையை உள்ளடக்கியுள்ளது, 1980 ஆம் ஆண்டின் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டம். இந்திய அல்லது மலேசிய இணைப்பாட்சி அமைப்புக்களின் கீழுள்ள மாகாண அரசுகள் அனுபவிக்கும் அதிகாரங்களைப் பல்வகையில் ஒத்திருக்கும் பான்மையில் இப்பிரதேச அரசுகள் தமது எல்லைகளுக்குள் பல்வகை விடயங்கள் மீது ஆதிக்கம் பூண்டுள்ளன. அபிவிருத்தித் தேவைகள் பேரிலோ நிருவாக, அரசாங்கத் தேவைகளின் மீதோ மாவட்ட அபிவிருத்திச்சபைகள் ஒரே அமைப்பாக இணைந்து கொள்வதைத் தடுப்பதற்கு எதுவுமேயில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் தலைவர்கள் சேர்ந்து ஒன்றிணைப்புக்குழுவொன்றை அமைத்துக் கொள்ளவும் முடியும். ஒரே சீரான கொள்கை ஒன்றின் அடிப்படைமீது அத்தகைய ஒன்றிணைப்புக்குழு நிருவாகத்தையும், பொருளாதார அபிவிருத்தியையும்அமைத்துக் கொள்ளவும் இயலும். இந்திய இணைப்பாட்சியில் இருக்கும் பிராந்தியசபைகள் திட்டமிடலிலும் பொருளாதார அபிவிருத்தியிலும் இவ்வப் பிராந்தியங்களிலுள்ள தனித்தனி அரசுகளை ஒன்றுசேர்க்கின்றன. இத்தகைய பிராந்திய சபைகள் இந்தியாவில் ஐந்து உள்ளன. இவ்வைந்திலும் ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, கேரளம் ஆகிய அரசுகளை உள்ளடக்கிய தென்பிராந்திய சபையே மிகவும் சுறுசுறுப்பான பிராந்திய சபை.

### அபிவிருத்திச்சபை அமைப்பில் எனது பங்கு

மாவட்ட அபிவிருத்திச் சபைக்கான திட்டத்தைத் தயாரிப்பதில் நான் ஈடுபட்டிருந்த வகையில் இச்சபைக்கான புறவுருவம் ஒன்றுக்குத் தேவையான எனது கருத்துக்களின் ஒரு பகுதியைத் தென்னாபிரிக்கக் குடியரசின் அரசியலமைப்பிலிருந்து பெற்றுள்ளேன் என்பதை நான் கூறமுடியும். (1902 இல் தென்னாபிரிக்கக் குடியரசு என மாறிய) தென்னாபிரிக்க யூனியன் 1909 இல் நிறுவப்பட்டது. அந்தச் சமயத்தில் பெரும்பான்மை ஆங்கிலம் பேசும் நேற்றால், கேப் ஆகிய இரு மாகாணங்களும் ஒரு புறத்திலும், பெரும்பான்மை (இன்று ஆபிரிக்கான்ஸ் என்று அழைக்கப்படும் மொழியாகிய) டச்சு மொழி பேசும் ஒறேஞ்ஞிவர் கொலனி திரான்ஸ்வால் ஆகிய இரு மாகாணங்களும் மறுபுறத்திலுமாக இருபகுதியினரும் நாடிய ஓர் ஒத்தாசைப் பிணைப்பு மீதே இந்த யூனியன் உருப்பெற்றது. எனினும், இந்த நான்கு மாகாணங்களிலும் மற்ற மொழி பேசும் சிறுபான்மை மக்கள் குறிப்பிடக்கூடிய தொகையில் இருந்தனர். நேற்றால் ஒரு சிறிய ஆங்கிலம் பேசும் மாகாணமாக இருந்தபடியால் தன்மீது டச்சுமொழி திணிக்கப்படும் என்ற பயம் அதற்கு இருந்தது. எனவே, இந்த மாகாணத்து மக்கள் இணைப்பாட்சி முறை ஒன்றையே பெரிதும் விரும்பினர்கள். இதற்கு மறுபுறத்தில் மூன்று மாகாணங்களிலுமிருந்த டச்சு மொழி மக்கள் வருங்காலத்தில் ஆங்கிலம் தமது டச்சு மொழியைத் தாழ்த்திதான்மேலோங்கிநிற்கும் என்று கவலை கொண்டனர். தென்னாபிரிகக யூனியன் அமைக்கப்பட்ட காலத்தில் கறுப்பு மக்களின் இனப்பிரச்சனை கவனத்துக்கு எடுக்கப்படவில்லை. ஈற்றில், இவ்வித பல்மன நிலைகளின் அடிப்படையிலிருந்து ஒரு சமரச ஒழுங்கு ஏற்பட்டது. இந்தச் சமரச அமைப்புப்பற்றி 'பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்தில் அரசியயலமைப்புச் சட்டங்கள் என்ற தமது நூலில் சேர். ஐவர் ஜென்னிஸ்ஸும் செல்வி. யங்உம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர். "இந்த நான்கு கொலனிகளையும் ஒரு யூனியன் நான்கு மாகாணங்களாகக் கணித்து ஒரு சமரச ஏற்பாடாகக்குறிப்பிடக் கூடிய அளவில்இவற்றிற்குஅதிகாரம்பரவலாக்குவதுஉடன்பாடாகி யூனியன் என்ற அமைப்புவிருப்பித் தெரிந்தெடுக்கப்பட்டது".

(குறிப்பு: மத்திய அதிகாரச் செறிவைக் கொண்ட இந்திய இணைப்பாட்சி--1950 இல் நிறுவப்பட்டபோது அது "இணைப்பாட்சி" என்று தன்னை அழைத்துக்கொள்ளாது "இந்திய யூனியன்" என்று அழைத்துக்கொள்ளத் தீர்மானித்தது போல தென்னாபிரிக்காவிலும் 'ஒற்றையாட்சியரசு' என்ற நிலையிலிருந்து வேறுபடுத்திக்காட்டுமுகமாக வே'யூனியன்' என்ற பதம் வேண்டுமென்றே பிரயோகிக்கப்பட்டிருப்பதை ஒருவர் ஊகித்துக்கொள்ளமுடியும்)

### தென்னாபிரிக்கா ஒரே ஒரு உதாரணம்

எனவே, ஒரே அரசின் எல்லைக்கோடுகளுக்குள் ஒன்றில் இணைப்பாட்சி அல்லது அப்பட்டமான ஒற்றையாட்சி என்ற நிலையில் இல்லாததான அரசு ஒன்றுக்கு நவீன உலகில், ஒரேயொரு உதாரணமாகத் தென்னாபிரிக்கா திகழ்கின்றது என்பதை அரசியல் விஞ்ஞானப் பாடநூல்கள் உறுதிப்படுத்திக் கூறுகின்றன. தென்னாபிரிக்காவிலுள்ள நாலு மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் மாகாணச்சபை ஒன்று ஆட்சி புரிகின்றது. ஒவ்வொரு மாகாணசபையும் தனது உறுப்பினர்களிலிருந்து தனது சொந்தத் தலைவரைத் தெரிவு செய்கின்றது. (தென்னாபிரிக்க அரசியலமைப்பின் 75 ஆம் பிரிவு) ஒவ்வொரு மாகாணச் சபையும் தனது முதற் கூட்டத்தில் நாலு உறுப்பினரைக் கொண்ட மாகாண நிறைவேற்றுக்குழு ஒன்றைத் தெரிவு செய்யும். (தென்னாபிரிக்க அரசியலமைப்பின் 78 ஆம் பிரிவு) இதே போல மாவட்ட அபிவிருத்திச்சபைகள் சட்டத்தின் 31 ஆம் பிரிவு தேவையான ஏற்பாட்டைக் கொண்டிருக்கின்றது. இதன் மீது மாவட்டசபையின் தெரிவு செய்யப்பட்ட தலைவருடன் ஆலோசித்து மாவட்ட அமைச்சர் நாலுக்கு மேற்படாத உறுப்பினரைக் கொண்ட நிறைவேற்றுக்குழுவொன்றை நியமிப்பார். அத்தகைய குழுமாவட்டசபையின் நம்பிக்கையைப் பெற்றிருத்தல் அவசியம் எனச் சட்ட ஏற்பாட்டில் உண்டு. தென்னாபிரிக்காவிலே மாகாண நிறைவேற்றுக்குழுவின் தலைவராக நிருவாகி என்ற ஓர் அலுவலர் இருக்கின்றார். (68 ம் பிரிவு) தென்னாபிரிக்க அரசாங்கம் இவரை நியமிக்கின்றது. இவர் மாகாணச்சபையில் அதிகாரத்திலிருக்கும் கட்சியைச் சேர்ந்தவராயிருக்க வேண்டிய தேவையில்லை. தென்னாபிரிக்காவின் நாலு மாகாணச் சபைகளுள் ஒறேஞ் பிறீ ஸ்ரேற், நேற்றால், திரான்ஸ்வால் ஆகிய மூன்று மாகாணங்களில் அவ்வவற்றின் மாகாணச் சபைகளில் அதிகாரத்திலிருந்த கட்சியல்லாத வேறு ஒரு கட்சியைச் சேர்ந்தவர் நிருவாகியாக இருந்த சந்தர்ப்பங்கள் இடம் பெற்றுள்ளன. அந்நாட்டின் பிரபல்யம் கூடிய பிரதமர்களுள் ஒருவராகிய ஜெனரல் ஏட்சொக் இதுபற்றிப் பின்வருமாறு கூறினர். "மாகாண நிருவாகங்களைத் தாபித்ததில் இணைப்பாட்சிமுறை தொனிகாட்டும் அளவிற்கு மாகாண நிருவாகி இணைப்பாட்சி அமைப்பின் அங்கமாயிருத்தல் வேண்டுமென்பது எமது அரசியலமைப்பின் நோக்கம் என்பதே எனது அபிப்பிராயம் .....". இந்த வகையில் தென்னாபிரிக்காவிலுள்ள நிருவாகி இலங்கையிலுள்ள மாவட்ட அமைச்சருக்குச் சமமானவர் என்று கூறமுடியும்.

எனவே, தென்னாபிரிக்கக் குடியரசிலுள்ள மாகாணச் சபைகளுக்கும் இலங்கைக் குடியரசின் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கும் இடையே இருக்கும் ஒற்றுமை அதிகம். தென்னாபிரிக்க அரசியலமைப்பின் ஒரு நிபுணராகிய என்றி ஜோன் மே என்பார் "தென்னாபிரிக்க அரசியலமைப்பு" என்ற நூலில் அந்த நாட்டின் இந்தப் பரிசோதனையை அளவு பிசகாது சரியாக எடையிட்டுப் பின்வருமாறு கூறியிருந்தார். "இணைப்பாட்சி முறை என்ற கருத்துக்கும் யூனியன் ஆட்சி முறை என்ற கருத்துக்கும் இடையிலான ஒரு சமரச ஏற்பாட்டுக்குத் (தென்னாபிரிக்காவிலுள்ள) மாகாண ஆட்சி முறை அரசியலமைப்புச் சட்டமாணவர்களுக்கு ஓர் உதாரணமாக அமைந்திருக்கின்றது. இந்த மாவட்ட அபிவிருத்திச்சபைத் திட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதிலேயே இதன் வெற்றியோ தோல்வியோ பெருமளவில் தங்கியிருக்கின்றது.

### தமிழீழக் கோரிக்கையின் சாரம்

கொழும்புத் தலைநகரிலுள்ள அரசியலமைப்பு ஏற்பாடுகளை மாவட்டங்களிலும் பிரதிபண்ணுவதற்கு மாவட்ட அபிவிருத்திச்சபைச் சட்டம் வழிசெய்கின்றது. இலங்கைக் குடியரசின் ஜனாதிபதிக்கு இணையாக மாவட்டத்தில் மாவட்ட அமைச்சர் தொழிற்படுவார். நடைமுறையில் ஜனாதிபதியின் முகவராக இவர் அமைவர். இதேபோல மாவட்ட அபிவிருத்திச்சபை சிற்றளவுப் பாராளுமன்றம் ஒன்றாக விளங்கும். சபையின் தலைவர் பிரதமர் போல இயங்கமுடியும். நிறைவேற்றுக் குழு அமைச்சரவை போல அமையும். பரந்த அளவிலான ஒரு புற உருவம் இவை. தமிழரின் தன்னாட்சிக் கோரிக்கையின் சாரம் பலவற்றை இது கொண்டிருக்கின்றது. இந்தப் புறவுருவத்தினுள் அடங்கும் விபரங்களில் திருத்தங்கள் ஏற்படுவதற்கும் தாராளமாக இது இடம் கொடுக்கின்றது. இந்த முழு ஏற்பாடுகளையும் அரசியலமைப்பில் நிலைப்படுத்தவும் முடியும். இந்தப் புதிய அமைப்பைத் தொழிற்படுத்துவதில் இரு தரப்புத் தலைவர்களும் ஒத்துழைக்கத் தயாராக இருந்தால் இவையனைத்தையும் சாதிப்பது இயலுமானதே.

### மாவட்ட அமைச்சர்

இந்த அமைப்பில் முக்கியமான இணைப்பு மனிதர், மாவட்ட அமைச்சராவார். நிறைவேற்றுக்குழுவின்தலைவர் இவர். குடியரசின் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் கொண்ட கட்சியைச் சேர்ந்தவராக இருப்பது அவசியமானதல்ல என்பது போல மாவட்ட அமைச்சரும் நிறைவேற்றுக் குழுவிலுள்ள உறுப்பினரின் கட்சியைச் சார்ந்தவராயிருப்பது அவசியமானதல்ல. இதன் அர்த்தமென்ன? ஒரு கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதியும், இன்னொரு கட்சியைச் சேர்ந்த அமைச்சரவையும் தமக்கிடையே ஆட்சியதிகாரத்தைப் பங்கிடக் கற்றுக்கொள்ள வேண்டியதைப் போல மாவட்ட அமைச்சரும் அவரது நிறைவேற்றுக் குழுவும் தாம் வெவ்வேறு அரசியற் கட்சிகளைச் சேர்ந்தவர்களாயிருப்பின் மாவட்டம் ஒன்றின் பொருளாதார அபிவிருத்தி என்ற இலக்கை நோக்கி சுமுகமாகத் தொழிற்பட வேண்டியது அவசியம். இந்த நிலபரத்தில் ஒரு ஜனாதிபதிக்கும் அவரது அமைச்சரவைக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களிலும் பார்க்க மாவட்ட அமைச்சருக்கும் அவரது நிறைவேற்றுக்குழுவிற்கும் இடையே கருத்து வேற்றுமைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உண்மையில் குறைவாகவே இருக்கும். ஏனெனில், மாவட்டம்ஒன்றில் அடையவேண்டிய ஒரேயொரு பிரதான குறிக்கோள் பொருளாதார அபிவிருத்தியே. ஆனல், தேசிய மட்டத்தில் ஒரு கட்சியைச் சேர்ந்த ஒரு ஜனாதிபதிக்கும் இன்னொரு கட்சியைச் சேர்ந்த அமைச்சரவைக்கும் பலதரப்பட்ட

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ....கிராம யாத்திரை.... கிராம யாத்திரை..... கிராம யாத்திரை....

கிராம யாத்திரை பல தொகுதிகளில் முடிவுற்றுளது. இந்த யாத்திரையின்போது பலதரப்பட்ட கருத்துக்களையுடைய மக்களைக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. வினாக்களையும், கருத்துக்களையும் விதண்டாவாதங்களையும் கேட்டோம்.

## ● அனுபவங்கள்

மக்களிற் பலர் தங்கள் கிராமங்களுக்கு அவசியம் தேவையானவற்றை எடுத்துக்கூறினர். கிணறு, பாடசாலை அபிவிருத்தி, வீதி, மின்இணைப்பு, சிறு கைத்தொழில், வேலை வாய்ப்பு, போக்குவரத்து வசதிகள், குடிதண்ணீர் - இவை போன்றவை பலருடைய வேண்டுகோள்களாகும்.

ஒடுக்கப்பட்ட மக்கள் பலர் சாதிக் கொடுமைகளும், புறக்கணிப்புக்களும் இன்னும் ஒழியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினர். ஆலயங்கள் சில எல்லோர்க்கும்திறக்கப்படவில்லை; சுடலை, கிணறு, சிகையலங்கார நிலையங்கள் முதலியன இன்னும் பொதுவாக்கப்படவில்லை என்பதைக் கேட்போருள்ளம் துன்புறும் வகையில் எடுத்துரைத்தனர்.

தமிழ் ஈழம் எப்பொழுது கிடைக்கும்? எப்படிப் பெற முடியும்? இதற்காக இயக்கம் இன்றுவரை என்ன செய்தது? மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் நன்மை தீமைகள் யாவை? மாவட்டசபைத் தேர்தல்கள் நடைபெறுமா? கன்பொல மாதிரிக்கிராமத்திறப்பு விழாவில் பங்குபற்றியதேன்? என்னும் நிலைமையைத் தெளிவாக அறிதற்கு மக்கள் வினாக்களைத் தொடுத்தனர்.

போலித் தீவிரவாதிகளுடைய விதண்டாவாத வீரர்களும் - தீவிர - மிதவாத - சீன - ருஷ்ய - வாசுதேவ இடது சாரித்தோழர்களும், சொந்தப் பகைமை பாராட்டுவோரும், சலசலப்பை உண்டாக்கத் திட்டமிட்டு இயங்கிய சில சதிகாரரும் முரண்பாடான - பொருத்தமற்ற முரட்டுக் கேள்விகளைக் கேட்டனர். இவர்கள் சில ஊர்களில் மட்டுமே தலைகாட்டினர். இவர்களின் கோஷ்டி மூன்று நான்கு இடங்களுக்கும்போய்க் கேட்ட கேள்விகளையே திரும்பத் திரும்பக் கேட்டது.

பொதுவாக மக்கள் அன்புடனும் பண்புடனும் ஆதரவளித்தனர். த. வி. கூட்டணியைச் சேர்ந்த மக்களிலே தனிப்பகைமையையும், பதவி கிடைக்காமையையும் காரணமாகக் குறைகண்ட சிலரைத் தவிர,

## ● பிரச்சனைகள்

ஏனையோர் யாவரும் கூட்டணிக்குத் தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்கினர்.

த. வி. கூட்டணிக்கு மாறாக திட்டமிட்டுப் பலவகையான பொய்யும் புரட்டும் பரப்பப்பட்டுள்ளனவாயினும் பொது மக்கள் அவற்றாலே சிறிதும் பாதிக்கப்படவில்லை. அபிவிருத்திக்கும் அரசியல் விடுதலைக்குமுள்ள தொடர்பையும், அணுகுமுறைகளையும்அவர்கள் நன்கறிந்தவர்களாகக் காணப்பட்டனர். சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய குறைகளைத்தீர்க்கவும், தேவைகளை இயன்றளவு நிறைவேற்றவும் ஏனையோரைப்போல நன்கு முயலவில்லை என்ற கருத்தும் சிலதொகுதிகளில் காணப்பட்டது. உண்மைக்கு மதிப்புக் கொடுப்பவர்கள் இதனை நியாயமற்றதெனக் கூற முடியாது. ஒருதொகுதியில் தங்கள் பா. உ. வைத் தேர்தலுக்குப் பின் தாங்கள் காணவில்லை எனவும், அழைத்தாலும் வருவதில்லை எனவும் குறைகூறப்பட்டது. கிராம யாத்திரையின் போது சிலர் கேட்ட வினாக்களை விதந்து இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

கிராம யாத்திரையா பாத யாத்திரையா என்றொருவர் கேள்வி தொடுத்தார். கிராம யாத்திரைதான். த. வி. கூட்டணியின் செயற்குழுவும் பொதுச் சபையும் கிராமயாத்திரை செய்வது என்று தான் முடிவுசெய்தன. அழைப்பிதழ்கள் முதலியன வற்றிலும் கிராமயாத்திரை என்றே அச்சிடப் பட்டுள்ளன. சுவரொட்டிகளில் பாதயாத்திரை என்று சில விஷயங்கள் எழுதியுளர். என்று மறுமொழி கூறப்பட்டது.

கேள்வி கேட்டவர் இதனை ஏற்றுக் கொள்ளாமல் அடம் பிடித்தார். பத்திரிகைகளில் பாத யாத்திரை என்று தான் காணப்படுகிறது. அமெரிக்க சஞ்சிகை ஒன்றும் பாத யாத்திரை என்று எழுதியுளது என வாதிட்டார். அங்கிருந்த மக்கள் சூடாக மறுமொழி கொடுக்கமுற்பட்டதால் அவர் கூட்டத்திலிருந்து போய் விட்

## ● பிரமுகர்கள்

டார். அவர்ஓர் அரசாங்க உத்தியோகத்தர் என்றும் தம்மைப் பிரசித்தப்படுத்த எங்கும் அடாத்தான கேள்விகேட்கும் பழக்கமுடையவர் எனவும் கூட்டத்திலிருந்த சிலர் கூறினர். கோப்பாய்த் தொகுதியில் ஒருவர் பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டு விட்டாலன்றி அரசாங்கத்திடம் வேலை வாய்ப்பையோ பல்கலைக்கழக அனுமதிகளையோ பிறவற்றையோபெறமுடியாது. ஆகையால் பிரிவினைக் கோரிக்கையை விட்டு விட்டால் என்ன என்று கேட்டார்.

அரசாங்கத்துடன் ஒத்துழைத்து எதனையும் பெற முடியாது. ஒத்துழைத்தவர்களின் கதி அதோகதிதான் எங்கள் நாட்டை நாம் ஆண்டால் தான் எங்கள் வாழ்வை வளப்படுத்தலாம் என்று மறுமொழி

## ● அபிப்பிராயங்கள்

கூறப்பட்டது. இவர் அண்மையிலே சமாதான நீதவான் பட்டம் பெற்றவராம். இதன் பின் த.வி.கூட்டணியின் ஆதரவாளராம் இவர். இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் த. வி. கூட்டணியிலிருந்து விரைவில் விலகுவார்கள்என்று பகிரங்கமாகச் சாத்திரம் கூறினார். தீவிரவாதம் பேசிச் சுதந்திரனை ஆதரித்துக் கொண்டு நிற்கும் ஒரு தீவிரவாதியுடன் அவருடைய காரிலேதான் என்று ஓர் இளைஞர் புன்சிரிப்புடன் கூறினார். இந்தத் தீவிரவாதி கோப்பாய் மகாவளவில் நடைபெற்றகூட்டத்தில் தான் கேட்ட கேள்வியையே நீர்வேலிக் கூட்டத்திலும் கேட்டார் என்று அந்த ஆசாமியின் தில்லு முல்லுகளை அறிந்த நீர்வேலிக் கிளை உறுப்பினர் கூறினார். அடைவுகடைஒன்றை அந்தஆசாமி நடத்துகிறாராம்.

ஓர்ஊரிலே அந்தத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தங்கள் பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர்களை நியமிக்காமல் புறக்கணிக்கிறாரே இது நீதியா என்று அன்பர் ஒருவர் கேட்டார். பாவம் அவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் நினைத்தால் தங்கள் தேவைகளை நிறைவேற்றலாம் என்று எண்ணுகிறார். இவரைப்போல அறியாமையால் எண்ணுபவர்கள் சிலர் இருக்கிறார்கள். எனினும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகச் சதி செய்யும் சிலர் பாராளுமன்ற உறுப்பினர்கள் நினைத்தால் எதையுஞ்செய்யலாம்;வேண்டுமென்றே புறக்கணிக்கிறார்கள் என்று சில மக்களுக்குக் கூறி அவர்களை ஏமாற்றிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாறாக அவர்களைத் தூண்டிவிடுவதுமுண்டு. அந்த அன்பருக்கு இதனையும் சுட்டிக்காட்டிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நினைத்தவுடன் நியமனங்களைச் செய்ய முடியாது. மக்கள் கேட்பவற்றை உடனே கொடுப்பதற்குப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் மந்திரக் கோல் இல்லை. ஆளும் சிங்கள ஏகாதிபத்தியத்தை தட்டியும் இடித்தும் கேட்டுத் தான் எங்கள் தேவைகளை நிறைவேற்ற வேண்டியுளது. இந்தஇரக்கும் நிலையை மாற்றுதற்கு எம்மை நாமே ஆள வேண்டும் என்று மறுமொழி கூறப்பட்டது. எல்லோரும் இதனை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டனர்.

(தொடரும்)

---

# உலகத் தமிழரின் உள்ளம் கவர்ந்த ஈழத் தமிழர் இனப்போர் கண்காட்சி!

கண் காட்சியின் முகப்பில் தமிழீழத்தின் வரை படம் "கட்அவுட்"டில் செய்யப்பட்டு, தமிழீழத்திற்குள் உலகத் தமிழர்கள் ஒருமிக்க நுழைவதைப் போலவே நுழைவாயில் அழகுற அமைக்கப்பட்டிருந்தன.

1961ஆம்ஆண்டுமுதல் 1977 ஆம் ஆண்டு வரை இலங்கையில் நடந்த தமிழ் மக்களின் இன விடுதலைப் போராட்டங்களைச் சித்தரிக்கும் எண்ணற்ற படங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

1977-ம் ஆண்டு சிங்களப் பேரின வாதத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழினப் படுகொலைகளைச் சித்தரித்த புகைப்படங்கள், கண்டோரையெல்லாம் இரத்தக்கண்ணீர் சிந்தவைத்தது.

1974-ம் ஆண்டு எந்த அரசாங்கத்தின் எள்ளளவுதுணையுமின்றி, யாழ்ப்பாணத்தில் எதிர்ப்புக்களுக்கிடையே ஈழத் தமிழர்கள் எழுச்சியோடு நடத்திய நான்காம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில், சிங்களப்போலீஸ்-இராணுவத்தினரின் திடீர்த் தாக்குதலால் கொலையுண்ட 9 தமிழர்களின் உயிர்ப்பலியைச் சித்தரித்த புகைப்படங்கள் பார்த்த, ஒவ்வொருவரையுமே உணர்ச்சி கொள்ளவைத்தன. "நான்காம் உலகத்தமிழ்மாநாட்டில் அன்னைமொழி காக்க தங்கள் இன்னுயிர்களையே ஆகுதி கொடுத்த அந்த உன்னதப் பிறவிகளுக்கு ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் கேவலம் ஒரு அனுதாபமேனும் 'தெரிவிக்கவில்லையே" என்று ஆதங்கப்பட்டுக் கூறவைத்தன.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் 50 மாநிலங்களில் ஒன்றான மசாசூசெட்ஸ், தனது மாநிலச் சட்டமன்றத்தில்தமிழீழ விடுதலையை ஆதரித்து ஒரு மனதாக நிறைவேற்றிய தீர்மானத்தின் நகலும், தமிழீழ விடுதலையை உறுதி செய்து அம்மாநிலச் சட்டமன்றம் வெளியிட்ட பிரகடனத்தின் நகலும் அங்கு வைக்கப்பட்டிருந்ததைக்கண்ணுற்று விட்டு; "எங்கோ பல்லாயிரம் கல் தொலைவுக்கு அப்பால், வேறொரு கண்டத்தில் இருக்கும் பிறிதொரு நாட்டில் உள்ள ஏதோ ஒரு மாநிலம், தமிழீழ விடுதலையை வற்புறுத்தி, தீர்மானமும், பிரகடனமும் நிறைவேற்ற முடியுமானால்; கூப்பிடு தூரத்தில் தமிழகம், மொழியாலும், இனத்தாலும், மதத்தாலும் ஒன்றான தமிழகம் ஏன் அப்படிச் செய்யக்கூடாது? அப்படிச் செய்யவிடாமல் தமிழக அரசைத் தடுத்துக்கொண்டிருப்பது என்ன? மொழியால் வேறுபட்டாலும் இதரவகையில் ஒத்தநிலையுள்ள இந்தியாவின் ஏனைய மாநிலங்களும் ஏன் மசாசூசெட்ஸைப் பின்பற்றக்கூடாது?" என்று கேட்கும்படி மக்களைத் தூண்டின.

கண்காட்சியை நடத்தியவர்களுக்கு இந்தக்கேள்விகளுக்குப் பதில் சொல்வதற்குள்போதும் போதுமென்றுவிட்டது.

இலங்கைத் தமிழர்களின் போராட்ட வரலாறுகளை விளக்கி இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வெளியிடப்பட்ட அறிக்கைகள், நூல்கள், பத்திரிகைச் செய்திகள் முதலியனவும் வைக்கப்பட்டிருந்தன.

தமிழீழத்தில் உள்ள காந்தீயம் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் இராசசுந்தரம், 1977 இனக்கலவரத்தின் அகதிகளாக்கப்பட்டு சிங்களப் பகுதிகளிலிருந்து தமிழ்ப் பகுதிகளுக்கு -- தம் தாயகத்திற்குத் துரத்தப்பட்ட மக்கள் மற்றும் ஈழத்தமிழர்களால் மலைநாடு என்று வழங்கப்படும் தோட்டப் பகுதிகளிலிருந்து சிங்கள இன வெறியர்களால் விரட்டப்பட்ட இந்திய வம்சாவளித் தமிழர்கள் ஆகியோருக்குப் புனர் வாழ்வு கொடுப்பதற்காக தமிழீழத்தில் நடந்துவரும் ஆக்கப்பணிகளைச் சித்தரித்து அருமையாகத் தொகுக்கப்பட்ட படங்களை (சிலைடுகள்) வெண்திரையில் தக்க விளக்கவுரையுடன் போட்டுக்காட்டினார். இதுவும் கண்காட்சியைக் காணவந்தவர்களுக்கு இலங்கையில் தமிழர்களுக்கு என்ன நடக்கிறது என்பதை எளிதாகப் புரிந்து கொள்வதற்குத் துணை புரிந்தது.

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகுந்தவாசன் வருவாரா?

வருவாரா வைகுந்தவாசன்? தருவாரா தமிழீழப் பிரகடனம்? என்று தலைவர் சிவா மட்டுமல்ல-தமிழ்மக்கள் எல்லோருமே தவித்துக் கொண்டிருப்பதை - இந்தச் சுதந்திரன் ஏட்டில் (18-3-81) ஒருவர் எள்ளி நகையாடி எழுதிக் கொட்டியிருக்கிறார்.

எங்கோ இருக்கின்ற லண்டன் மாநகரில் வாழ்ந்து கொண்டு சுயவிளம்பரத்துக்காக உலக சுற்றுலா செய்துவரும் வைகுந்தவாசன் அடுத்த ஆண்டு தைப்பொங்கல் நாளில் தமிழீழப்பிரகடனம் செய்து அதிர்வேட்டு முழங்கப் போகின்றாராம் - சுதந்திரன் சொல்லிச்சொல்லி மகிழ்கிறது.

வைகுந்த வாசன் உண்மையிலேயே ஒரு வைர நெஞ்சம் படைத்த மனிதரென்றால் - விடுதலைப் போராட்ட வீரரென்றால் - தலைவர் சிவா சொன்னது போல தமிழீழப் பிரகடனத்தை தமிழீழத்திலேயே செய்தால் என்ன? பொலிசார் என்ன பொற்காப்பா போடப் போகின்றார்கள்?

இதை விடுத்து - வெள்ளைக்காரப் பொலிசார் வேடிக்கை பார்த்து விலாஒடியச் சிரிக்க லண்டன் வீதியில் நின்று கம்படி சிலம்படி பழகப் போகின்றேன் என்றால் என்ன அர்த்தம்?

விழுப்புண்ஏந்தாமல் வீரனாகிவிட்ட வைகுந்த வாசன் சினிமாப் பாணி ஸ்ரண்டு செய்து கதாநாயகனாக முயல்வதைக் கண்டு - வெட்கமே இல்லையா? என்று உலகம் வினா எழுப்புகின்றது-சுதந்திரனோ அவரை சுபாஸ் சந்திரபோஸின் மறு பிறவி என்று சொல்லித் துதிபாடப் பார்க்கிறது.

சுபாஸ் எங்கே? இந்தச் சுண்டங்காய் மனிதர் எங்கே?

எழில் நலம் மிக்க ஒரு ஏந்திழையின் வதனத்திற்கு - வெளிறிப்போன விடியற் காலத்து நிலவையா ஒப்பிட்டு மகிழ்வார்கள்?

சுபாஸ் சந்திரபோஸின் சுத்த வீரர்களில் ஒருவராம் பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவரின் பக்கத்தில் நிற்கும் தகுதி கூட - சுதந்திரன் வானளாவப் புகழும் வைகுந்தவாசனுக்கில்லையே

கிருஷ்ண வைகுந்தவாசன் என்ற பெயர் பூண்ட காரணத்தால் - அவரை கேரளத்துச் சிங்கம் கிருஷ்ண மேனனுடன் ஒப்பிடலாமா?

உண்மை இப்படி விழித்துக் கொண்டிருக்க தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடத்தைப் பலவீனப்படுத்த வேண்டுமென்ற இவர்களின் உள்நோக்கமா பலிதமாகப் போகின்றது?

இயக்கத் தலைமையை தங்களால் எதுவுமே செய்ய முடியாது என உணர்ந்த பின்னும், இந்தத் தீவிரவாதிகள் ஏன்உமியைக் குற்றி கைசலிக்கின்றார்கள்?

கண்ணிரண்டையும் விற்று கலைந்துபோன சித்திரங்களை வாங்கத் துடிக்கும் இந்த அதிசய மனிதர்களைப்பார்த்து உலகமே காறிஉமிழ்கிறதே சூடுசுரணை கூடவா இல்லாமல் போயிற்று?

தமிழீழப் பிரகடனம் ஏற்கெனவே செய்து விட்டோம் என்று தலைவர் சிவா சொன்னதும் பகிடியாம்.

எது பகிடி யென்று இந்த தீவிரவாதிகளுக்கு இன்னும் தெரியவேயில்லை.

**இங்கே பசியால் அழுதுதுடிக்கும் குழந்தைக்கு எங்கேயோ இருக்கின்ற கன்னிப்பெண் பாலூட்டுவேன் என்று சொல்வது பகிடியல்ல -**

எண் சாத்திரம் பார்த்தே இயக்கத்திற்குப் பெயர்சூட்ட வேண்டுமென்று கூறுவது பகிடியல்ல

தலைவர் சிவா சொன்னதுதான் பகிடியாகத் தோன்றுகிறது!

காகத்திற்கும் கருங்குயிலுக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் -

துண்டு பீடிக்கும் ஊதுபத்திக்கும் . வித்தியாசம் தெரியாதவர்கள்

பகிடிக்கும் சீரியசுக்கும் வித்தியாசம் தெரியாமல் தான் இருப்பார்கள் - இது ஒன்றும் விசித்திரமல்ல!

இழந்த தமிழர் தாயகத்தை மீட்டெடுப்போம் என நாம் வட்டுக்கோட்டை மாநாட்டில் செய்த தீர்மானம் - தமிழீழப் பிரகடனம் அன்றி வேறென்ன? இது என்ன வைகுந்தவாசன் லண்டன் விளையாட்டா?

எமது பூமியிலிருந்து - சிங்கள ஏகாதிபத்தியத்தை வெளியேற்ற வேண்டு மென்பதுதானே-தமிழீழத் தீர்மானம் தாங்கியிருக்கும் உட்கருத்து!

இதைப் பிரகடனம் என்று சொல்லாமல் பிலாக்கணம் என்றா பேசுவது?

இல்லை - இந்தப்பிரகடனம் வலுவானதல்ல-இன்னுமொரு பிரகடனம் செய்யவேண்டுமென்று இந்தத் தீவிரவாதிகள் விரும்பினால் வைகுந்தவாசனை வரவழைக்கட்டும்! நாமும் -

**நீல விதானத்து நித்திலப் பந்தலின் கீழ்-வாழை - கமுகு - மாவிலை தோரணம் கட்டி அவரை வரவேற்கிறோம்.**

இரண்டாவது சரித்திரப் பிரகடனத்தை அவர் இந்த மண்ணில் முழங்கட்டும்!

ஆனால் வைகுந்தவாசன் இங்கே வரவிரும்புவது போலவும் - வந்தால் தமிழர் விடுதலைக் கூட்டணி அவரைக் கட்டிப்பிடித்து சிங்களப் பொலிஸாரிடம் கையளித்துவிடும் என்று இந்தப் போலித் தீவிரவாதிகள் 'புலுடா' விட்டு சினிமா நடிகைகளைப் போல கண்ணீர் சிந்துகின்றார்கள்.

இன்பம் - செல்வம் என்ற இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட போது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் விருந்துண்டு மகிழ்ந்தார்கள் என்று தலையிலடித்துக் கொண்டு வீரிடும் இந்தத் தீவிரவாதிகள் - அந்த நேரத்தில் -

பாணையும் வட்டரையும் பக்கத்திலே வைத்துவிட்டு - விஸ்கி மட்டும் போதுமென வைகுந்தவாசன் விரதம் இருந்ததாக இங்கே பிரச்சாரம் செய்ய விரும்புகிறார்களாக்கும்!

**தந்தை செல்வாவைத் தலைகீழாக நின்று எதிர்த்த கிருஸ்ண வைகுந்த வாசன - தந்தை செல்வாவே உருவாக்கி விட்ட பத்திரிகை 'ஹரே ராமா! ஹரே கிருஷ்ண' என்று தலையில் வைத்துக் கூத்தாடுவதைக் காணும்போது.**

உலகம் விரைவில் அழிந்து விடுமென்று சில சோதிடர்கள் சொல்வதில் உண்மையிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. அதற்கு முன் ஆசைக்கு ஒருதடவையாவது -

வைகுந்தவாசன் தமிழீழத்துச்கு வருவாரா? முக தரிசனம் தருவாரா? தமிழீழப் பிரகடனம் செய்வாரா? என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கிடக்கிறோம்!

ஆமாம் - அவர் வருவாரா?

**ஆசிரியர் பேசுகிறார்**

# கிராம யாத்திரையால் சுதந்திரன் அடைந்த கிலி!

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் கிராமயாத்திரை பெருவெற்றியடைவதைப் பொறுக்கமுடியாத விஷமிகளின் முன்னணியில் சுதந்திரன் காட்சியளிக்கிறது. *11-3-81, 15-3-81, 18-3-81* ஆகிய இதழ்களில் சுதந்திரன் பக்கம்தோறும் தமிழர் விடுதலைக் கூட்டணியைத் திட்டித் தீர்த்திருக்கிறது.

அதன் தலைவர்கள் வெவ்வேறிடங்களில் பேசியபேச்சுக்களை ஒட்டியும் வெட்டியும், கூட்டியும் குறைத்தும், திரித்தும் புரட்டியும் வெளியிட்ட பத்திரிகைகள்யாவற்றையும் தேடிப் பிடித்துத் தலைவர்களிலே குற்றம் பிடித்தற்குத் தேவைப்படும் பகுதிகளைப் பிரித்தெடுத்துத் தொகுத்து வெளியிட்டு மகிழ்ச்சி கொள்கிறது; அவர்கள் முரண்படப் பேசுகிறார்கள் என்பதைக் காட்ட முனைகிறது. சுதந்திரனே முன்னுக்குப்பின் முரண்பட எத்தனைமுறை எழுதியிருக்கிறது.

தமிழ் ஈழப் பிரகடனம் 1982 இல் தைப்பொங்கல் நாளில் நடைபெறும் என்று பலமுறை பறை சாற்றியது. காஞ்சி ஏகாம்பரநாதருக்கும் தமிழ் ஈழப் பிரகடனம் நிறைவேற வேண்டுமென மும்மூர்த்திகளும் (கோவை, ஈழவேந்தன், வைகுந்தவாசன்) அருச்சனைசெய்வித்தார்கள். வெறும் ஈழப் பிரகடனம் குழந்தைப் பிள்ளை விளையாட்டு என்று விடயமறிந்தோர் சாட்டையடி கொடுத்தனர். இந்தச் சாட்டையடிக்குத் தாக்குப் பிடிக்க முடியாத சுதந்திரன் இப்பொழுது **"லண்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானம் தமிழீழக் கொள்கைப் பிரகடனமல்ல - தமிழீழத்தின் புதிய அரசு 1982 ஜனவரி 14-ம் நாள் செயற்படத் தொடங்கும் என்ற அறிவிப்புத்தான், அதாவது தமிழீழ'அரசுப் பிரகடனம்'** என்று விளக்கத் தொடங்கியுள்ளது. இந்தவிளக்கத்துடன் அது நின்றுவிடவில்லை.

புதிய தமிழ் ஈழ அரசுக்குத் தலைமை தாங்கக் கூட்டணித் தலைவரொருவர் நாட்டைவிட்டு வெளியேறுவாரா? என்றுகேள்விகேட்கிறது. கூட்டணித் தலைவர் ஒருவர் தலைமை தாங்கி விடுதலைப் போராட்டத்தை நடத்த முன்வர வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கிறது. இதற்கு **அதன் புதுத் தலைவர் வைகுந்த வாசன் தகுதியற்றவரா?**

தமிழ் ஈழப் பிரகடனப் புகழ் வைகுந்தவாசனைத் தலைவராக்க இங்கும் இந்தியாவிலும் முயன்ற சுதந்திரன் ஆசிரியர் இப்படி வைகுந்தவாசனைத் தூக்கித் தொப்பென்று போடுவார் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. "தீவிர அணியிலே தலைவர் ஒருவரும்இல்லை. கரையும் காக்கைக் கூட்டம் தான் அது" என்பதையும் கோவை மகேசன் இவ்வாறு வெளிப்படுத்துவது ஏனைய மூர்த்திகளுக்கு முகத்தில் கரி பூசுஞ் செயலாகும்.

மும்மூர்த்திகளுமே ஜனாதிபதி, பிரதம அமைச்சர், பிரசார அமைச்சர் பதவிகளை முதலில் அலங்கரிக்கத் தகுதியும் உரிமையுமுடையவர்களன்றோ!

வாழ்க மும்மூர்த்திகளின் புதிய ஈழத் தமிழரசு! வெல்க அவர்கள் முயற்சி!

## சிறைக்குள் தள்ளப்பட்ட ஜனாதிபதி

அரசாங்கப்பணத்தைக் கையாடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஆர்ஜன்டைனா ஜனாதிபதி திருமதி மரியா எஸ்ரெல்லா பெரோனுக்கு எட்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளன.

1976 மார்ச்சில் புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டுக் கைது செய்யப்பட்ட இந்த அம்மையார் தொடர்ந்து தடுப்புக் காவலில வைக்கப்பட்டிருந்தார்.

50 வயதான இப் பெண்மணி தமது கணவர் 1974 ல் இறந்ததும் ஜனாதிபதி பதவிக்கு வந்தார். (வீரகேசரி 22-3-81)

## அரசுக்கெதிராக 550 முறைப்பாடுகளாம்!

யு.என்.பி. அரசுக்கெதிராக பொதுமக்கள் 550 குற்றச்சாட்டுகளை அனுப்பியிருக்கின்றார்கள். இவற்றை ஜனாதிபதியின் விசேட ஆணைக்குழுவினர் விசாரித்து வருகின்றார்களாம்.

1977 -- 1980 ஆண்டுவரை இந்த அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் நடைபெற்ற ஊழல் அதிகார துஸ்பிரயோகம் சம்பந்தமாகவே மேற்படிக் குற்றச்சாட்டுகள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரையில் ஒலித்த மாணிக்கத் தமிழ்!

## மாநாட்டு மலரில் ஈழத்தறிஞர்

## படைப்பு மணம்கமழவில்லை!

**ஆராய்ச்சிக் கருத்தரங்கு 5-1-31**

காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கருத்தரங்கில் தமிழ்மொழி, தமிழ் யப்பானிய ஒலியமைப்பு முறை ஒற்றுமைகள், தமிழ் மொழியும் மராட்டி மொழியும் எனும் ஆராய்ச்சித் தலைப்புகளில்திரு.ஏ.சுப்பையா, பேராசிரியர் சூஸ்மு-ஒநு, திரு. வீ. கெய்ரே முதலியோர் முறையே ஆய்வு நிகழ்த்தினார்கள்.

**பொதுநிலைக் கருத்தரங்கு:**

பந்தயத் திடல் மூவேந்தர் அரங்கில் சேதுராமன் குழுவினரின் நாயன இசையுடன் ஆரம்பமாகிய விழாவுக்குமேல வைத் தலைவர் டாக்டர் ம. பொ.சி.தொடக்கஉரையாற்ற 'மாந்தர் தோற்றமும் தமிழர் மரபும்' எனும் தலைப்பில் நீதிபதி கோகுல கிருஷ்ணன் தலைமையில் கருத்தரங்கம் ஆரம்பமானது. தொடக்க உரையைபேராசிரியர்சை.வே. சிட்டிபாபு வழங்க வாழ்த்துரையை டாக்டர் மு அறம் வழங்கினார். இதில் பேராசிரியர்தேவநேயப்பாவாணர்,பன்மொழிப் புலவர் அப்பாத்துரை, பேராசிரியர் பரமசிவானந்தம், டாக்டர் சஞ்சீவி குடந்தை ப. சுந்தரேசனார், பேராசிரியர் இரா. மதிவாணன் உட்பட 11 பேர் பங்குபற்றினர். கவியரங்கில் பன்னிரு கவிஞர்கள் பங்குபற்றினர். 'எப்போதும் இருப்பவர்கள்' எனும் தலைப்பில் திருவள்ளுவர், இளங்கோவடிகள், சாத்தனார், கம்பர், திருத்தக்கதேவர், குமரகுருபரர், சிவப்பிரகாசர், வேதநாயகம், உமறுப்புலவர், வள்ளலார், பாரதியார், பாரதிதாசன் ஆகிய சான்றோர்கள் பற்றி கவியரங்கம் அமைந்தது. புலமைப்பித்தன் தலைமை தாங்க பாவலர் முத்துசாமி தொடக்கவுரை வழங்க கவிஞர் துறைவனின் வாழ்த்துரையுடன் கவியரங்கு ஆரம்பமானது.

மாலை கலை நிகழ்ச்சியாக மீனாட்சி சபாநாயகம் வைஜயந்திமாலா, செயந்தி இராஜகோபாலன் சாமுண்டீஸ்வரி ஆகியோரின்வயலினும், கடையேழு வள்ளல், மேஜர் சுந்தரராஜனின் 'கல்தூண்' ஆகிய நாடகங்களும் எம். எல். வசந்தகுமாரி, எம். ஆர். விஜயா ஆகியோரின் பாட்டும் வெவ்வேறு 4 அரங்கங்களில் சிறப்பாக நடைபெற்றன.

தமிழின் பழம் பெருமைகளை விளக்கும் சிற்பம், மருத்துவம் கட்டடம், பண்பாடு, ஓவியம், கலை கலாச்சாரம், கைத்தொழில் ஆகியவற்றினை விளக்கும் கண்காட்சி ஒன்றினை தமுக்கம் மைதானத்தில் கர்நாடக முதல்வர் திரு. ஆர். குண்டுராவ் திறந்து வைத்தார். இக் கண்காட்சி தமிழர்களின் பழம்பெரும் சிறப்புகளை விளக்குவதாக அமைந்தது மட்டுமன்றி பாமர மக்கள் உட்பட பலரது கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைந்தது. குறிப்பாகவைகை ஆற்றுப் பாலத்தைத் தத்ரூபமாக வர்ணித்த காட்சியும் ஆட்டுக்கடாவுடன் போர் புரியும் வீரரின் ஓவியமும் பிரமாண்டமான மயிலின் உருவமும் ஏனைய கைவினைப் பொருட்கள் பலவும் சிறப்பாக அமைந்திருந்தன.

**6-1-81 நிகழ்ச்சிகள்**

'கிரேக்கமும் தமிழ் நாடும்' 'திராவிட ஆல்டிக்உறவுமுறைகள்' 'தமிழ்சிற்பக்கலை' எனும் தலைப்புகளில் முறையே டாக்டர்-எல்லிக்கி ஜான்னஸ், டாக்டர் ஜே. வாசக், பேராசிரியர் பீட்டர் எம். கார்ட்னர் ஆகியோரின் ஆய்வுக்கட்டுரைகள் சிறப்புக் கட்டுரைகளாக அமைந்தன.

பொது நிலைக் கருத்தரங்கில் மதுரை ஆதீன ஓதுவார்களின் திருமுறைப் பாடல்களுடன் பட்டிமன்றம் ஆரம்பமானது. உலகவாழ்வுக்கு உயிரூட்டுவது அறிவியலா? பொருள்வளமா? இன்பச் செழுமையா? எனும் தலைப்பில் தவத்திரு குன்றக்குடி அடிகள் தலைமையில் திரு. தா. பாண்டியனின் தொடக்கவுரையுடனும், பேராசிரியர் தமிழ்க் குடிமகனின் வாழ்த்துரையுடனும் பட்டிமன்றம் சிறப்புற நடைபெற்றது. ஒவ்வொரு தலைப்பின் கீழும் நால்வர் வாதாடினர். பலரது விறுவிறுப்பான விவாதம் மக்களிடையே கரவொலியையும்சிரிப்பொலியையும் பலதடவை ஏற்படுத்தி மூவேந்தர் அரங்கையே முட்டி மோதியது.

> ✲ பல தமிழ் அறிஞர்களின் கவிதைகள், கட்டுரைகள் அடங்கிய உலகத் தமிழ் மாநாட்டு சிறப்பு மலரொன்று தலைமை நீதிபதி எஸ். எஸ். இஸ்மாயில் அவர்களால் மூவேந்தர் அரங்கில் வெளியிடப்பட்டது.
>
> அழகிய வண்ண முகப்புடன் அமைந்த இச் சிறப்பு மலரில் தமிழக அமைச்சர்கள் தமிழ் அறிஞர்கள், கவிஞர்கள், ஓவியர்கள் ஆகியோரின் படைப்புக்கள் இடம்பெற்றன. ஆனால், இலங்கை, ஏனைய நாட்டு அறிஞர்களின் ஆக்கங்கள் அதிகம் இடம் பெறாதது இம்மலரில் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. மறைந்த தனிநாயகம் அடிகளாரின் கட்டுரை ஒன்று இம்மலரில் இடம்பெற்றது சிறப்பானது.
>
> — **இணுவை ந. சண்முகப்பிரபு**
> பேராதனைப் பல்கலைக் கழகம்

பிற்பகல் நடைபெற்ற 'திருக்குறள் அரங்கத்' தில் திருக்குறளார் திரு. வி. முனிசாமி தலைமைதாங்க திரு.தை. சுந்தர வடிவேலு தொடக்கவுரை வழங்க திரு.டி.கே.சீனிவாசன்வாழ்த்துரைவழங்கினார் புலவர் த. ரா. முருகவேள் டாக்டர் த. பிச்சமுத்து, பா. நடராசன், சுப அண்ணாமலை உட்பட பதின் மூவர் பங்குபற்றினர். திருக்குறள் பற்றிய கருத்தரங்கு பலருக்கும் தித்திப்பாக அமைந்தது.

காந்தி நினைவுகூட திறந்த வெளியரங்கில் லெமூரியா-குமரிக் கண்டம் எனும் தமிழக வரலாறு கூறும் ப. நீலகண்டன் தயாரித்த சினிமாப்படத்தினை கேரள முதல்வர் திரு.இ. கே. நாயனார் தொடக்கிவைத்தார். லெமூரியாக் கண்டத்திலிருந்து, ''இமயமலை தோன்ற முன்னரே தோன்றிய'' குமரிக்கண்டமாம் தமிழ்நாட்டின் வரலாறு. அதன் பழைய சிறப்பு பாண்டிய அரசனின் புகழ் என்பவற்றைக் கூறிய இத்திரைப்படம் தமிழர் தம் வரலாற்றுக்கு ஓரளவு சாட்சி கூறுவதுபோல் அமைந்தது.

கலை நிகழ்ச்சிகளாக பால முரளி கிருஷ்ணா, எம். எல். வசந்தகுமாரி ஆகியோரின் பாட்டும், வையந்திமாலா, டாக்டர் பத்மா சுப்பிரமணியம், செல்வி. பிரியபாலா அலர்மேல்வள்ளி ஆகியோரின் நடனமும், சிட்டிபாபு, கே. பி. சிவானந்தம்ஆகியோரின்வீணையும், திருவள்ளுவர், மனோகரின் 'ஒட்டக்கூத்தர்' ஆகிய நாடகங்களும் நடைபெற்றன.

**7-1-81 நிகழ்ச்சிகள்**

பலதமிழ் அறிஞர்களின் கவிதைகள், கட்டுரைகள் அடங்கிய உலகத் தமிழ் மாநாட்டு சிறப்பு மலரொன்று தலைமை நீதிபதி எஸ். எஸ். இஸ்மாயிலால் மூவேந்தர் அரங்கில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அழகிய வண்ண முகப்புடன் அமைந்த இச்சிறப்பு மலரில் தமிழக அமைச்சர்கள், தமிழ் அறிஞர்கள், கவிஞர்கள், ஓவியர்கள் ஆகியோரின் படைப்புக்கள் இடம்பெற்றன. ஆனால் இலங்கை, ஏனைய நாட்டு அறிஞர்களின் ஆக்கங்கள் அதிகம் இடம் பெறாதது இம்மலரில் அவதானிக்கக்கூடியதாகவிருந்தது. மறைந்த தனிநாயகம் அடிகளாரின் கட்டுரை ஒன்று இம்மலரில் இடம்பெற்றது சிறப்பானது.

மலர் வெளியீட்டுக்கு முன்பு 'புலவர் குழு அமர்வு' இடம் பெற்றது. இதில் தமிழகப்புலவர்களே இடம் பெற்றிருந்தனர். 'தமிழ் வளம்' எனும் தலைப்பில் புலவர் குழுத் தலைவர் டாக்டர் வ. சுபமாணிக்கம் தலைமையுரை நிகழ்த்த முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் தொடக்கவுரை நிகழ்த்த மதுரை பழனியப்பனின் வாழ்த்துரையுடன் ஏனைய புலவர்களின் கருத்துக்களும் இடம்பெற்றன. சுமார் 30க்கும் மேற்பட்ட புலவர்கள் பொன்னாடை போர்த்தியும், நினைவுத்தட்டு வழங்கியும் திரு எம். ஜி. ஆரால் கௌரவிக்கப்பட்டமை சிறப்பாகஅமைந்தது. அப்பொழுது அங்கு உரையாற்றிய ஒருவரின் உரை சிந்தையைத் தொட்டது. ''இதுவரை தமிழறிவு மிக்க புலவர்கள், வித்துவான்களைக் கௌரவித்து, அவர்களை மதித்து, அவர்தம் கருத்துரையை ஏற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தை அளித்ததன்மூலம் எவரும் செய்யாத ஒன்றை அமைப்புக் குழுவினர் செய்துவிட்டார்கள். அதற்குத் தலை வணங்குகிறோம்'' என்று தமிழன்னையின் புதல்வர் ஒருவர் உள்ளம் உருகக் கூறியதே அதுவாகும்.

புலவர் குழுத் தலைவர் சுப மாணிக்கம் தமதுரையில் ஒரு தவறான தகவலைக் குறிப்பிட்டு பல ஈழத் தமிழர்கட்கு மனத் தாங்கலை ஏற்படுத்தினார். இலங்கைக்குத் தான் வந்திருந்தபோது தான்தங்கியிருந்த இடத்தில் ஆங்கிலத்திலேயே அனைவரும் பேசினார்கள் என்றும், இலங்கையிலேயே தமிழ் அழிந்து ஆங்கிலம் வளரும் ஆபத்துத் தோன்றியுள்ளது என்றும், இலங்கைத் தமிழர்கள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே பேசுகிறார்கள் என்றும் கூறியபோது தான் திடீரென அச்சம்பவம் நடைபெற்றது. பல ஈழத்தமிழர்கள் இச் செயலால் துடிதுடித்து துன்புற்று பொங்கிக் கொண்டிருந்த வேளை திடீரென 'தமிழர் கூட்டணித் தொழிற்சங்கச் செயலாளர் திரு. சம்பந்தன் பேராளர்கள் நடுவேயிருந்து எழுந்தார்.


''அப்படிக் கூறியது தவறு. இலங்கையில் உள்ள தமிழ் மக்களில் அனைவருமே தமிழில் பேசி, தமிழில் எழுதுபவர்கள். பல்கலைக்கழகத்தில் தமிழ்மூலம் பயில்கிறார்கள். இலங்கையில் தமிழ் தேசிய மொழியாக்கப் பட்டிருக்கிறது. நீதிமன்றங்களிலும் தமிழ் உண்டு. ஒரு சிலர் ஆங்கில மோகம் கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால் அனைவருமே அப்படியல்ல'' என்று திடீரென சபை நடுவே எழுந்து கூறியவரை முதலமைச்சர் உட்பட பலரது கண்களும் கவனித்தன. ஒரு சிலர் வந்து அவரை ஒருவாறு அமர்த்தினார்கள்.

முத்தமிழ்க் காவலர் தமது உரையில்குறிப்பிட்டவை சிறப்பாக அமைந்தன. இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளிலெல்லாம் இல்லாத சிறப்பை தமிழில் அவதானிக்கலாம் என்றும் ஏனைய மொழிகளின் உச்சரிப்பில் இல்லாத இனிமை தமிழில் இருப்பதை வேறுபாஷைச் சொற்கள் அதில் உச்சரித்துக் காட்டியும் தெளிவுற விளக்கினார்.

'ழ' எனும் எழுத்து தமிழுக்கே உரிய சிறப்பான எழுத்தென்றும் அவ்வெழுத்தை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய எந்த எழுத்தும் ஆங்கிலத்திலோ ஏனைய மொழிகளிலோ இல்லையென்றும் கூறி தமிழுக்கே உரிய சிறப்பான தோல், துளை, தார் இசைக் கருவிகளான முழவு, குழல், யாழ் என்பன தமிழர் தம் சிறப்பைப் பேண அவற்றின் பெயர்களிலே 'ழ' கர எழுத்து சிறப்பாக உள்ளதென்றும்கூறி தமது உரையை அனைவர் மனத்திலும் பதிய வைத்தார்.

'எண்களும் எண்ணங்களும்' எனும் தலைப்பில் கவிஞர்வாலி தலைமை தாங்க கவிஞர் கும்பராமன் தொடக்கவுரை வழங்க வாழ்த்துரையை கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி வழங்க கவியரங்கம் ஆரம்பமானது. ஒன்றுதொடக்கம் பதின்மூன்று எண்கள் வரை ஒவ்வொரு எண்ணிற்கும் கவிஞர் பதின்மூவர் கவிதைபாடி சபையைக் கலகலப்பூட்டினர். மூவேந்தர் அரங்கு கவிவேந்தர்கள் அரங்காகியது.

அன்று மாலை 'இலக்கிய வளர்ச்சிக்கு எழில் சேர்ப்பது உணர்வுவளமா?நாடகவளமா? அறக்கருத்துக்களா?' என்னும் தலைப்பில் இடம்பெற்ற பட்டிமன்றத்திற்குக் கலைமகள் ஆசிரியர் வா.கி.ச., கலாநிதி கி. வா. ஜெகநாதன் நடுவராக விளங்க திரு. மீ. பா. சோம



சுந்தரம் தொடக்கவுரை வழங்க திரு. ப. நீலகண்டன் வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் துரைராசன்,ராசகோபாலன், அறிவுடை நம்பி, திருமதி சாரதாநம்பி ஆரூரன், சாலமன் பாப்பையா, மைக்கல் பரடே, லலிதா அறிவுடை நம்பி ஆகியோர் இதில் பங்கு கொண்டு கருத்துக்கு விருந்தளித்தனர். மன்னர் திருமலை நாயக்கர் மகாலில் ஒலி, ஒளி காட்சித்தொடக்கவிழா அன்று மாலை இடம் பெற்றது.

ஆராய்ச்சிக் கருத்தரங்கில் பால்யனார், நீதிபதி எஸ். மகாராசன், புத்தனேரி சுப்ரமணியம் ஆகியோர் உட்பட ஈழத்தறிஞர் பலர் தமது ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம். பி. யின் உரிமையில் மந்திரி கைவைப்பதா?

'சிங்கள மாவட்ட அபிவிருத்திகளைப்போன்று சமமாக தமிழ் மாவட்ட அபிவிருத்திகள் கருதப்படுவதில்லை' என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு கவலை தெரிவித்தார்.

தமிழ்ப்பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளை அமைச்சர்களும், அமைச்சு அதிகாரிகளும் தமது எண்ணப்படி செலவு செய்ய முனைகின்றனரே

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு அமைச்சர்கள், இரு உதவியமைச்சர்கள் இன்றைய அரசில் அங்கம் வகிக்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டமோ அண்மையில் சூறுவளியால் தரைமட்டமாகி அவல நிலையிலிருக்கின்றது.

இந்த அவலநிலை போல் வேறெந்தமாவட்டமும் இன்று இல்லை. இருந்தும் அபிவிருத்திக்கு ஒதுக்கிய நிதியோ மிக மிகச் சொற்பம்.

நிதியில் கைவையாது புறம்பாக நிதி வழங்கலாம்தானே.

இதைவிடுத்து எமக்குத்தந்த நிதியில் எதேச்சாதிகாரமாக எம். பி.யை உதாசீனம்செய்து செலவுசெய்வதை அனுமதிக்க முடியாது.

இதேபோல காங்கேசன் துறைத் தொகுதிக்கு ஒதுக்கிய 25 இலட்சம் ரூபாவில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவைச் சம்பந்தப்பட்ட எம்.பி. யின் அனுமதியின்றி பிரதமர்

## வட்டுக்கோட்டை 'திரு' ஆட்சேபம்!

தவிர, சிங்கள மாவட்ட அபிவிருத்திகளுக்கு ஈடாக தமிழ் மாவட்ட அபிவிருத்திகளை அவர்கள் நினைப்பதில்லை என்றும் திரு. திருநாவுக்கரசு எம். பி. கண்டனம் தெரிவித்தார்.

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் வெள்ளி விழா சித்தன்கேணி மகா கணபதிப் பிள்ளையார் தெற்கு வீதியில் செல்வன் அ. பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு பேசியபோது அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:- சிங்கள மாவட்டங்களை அபிவிருத்தி செய்து கொண்டு எமதுமாவட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

இதனை எமது இளைஞர்களும் பொது மக்களும் உணர்ந்து கொண்டு அயாராமுயற்சிகள் மூலம் எமது பிரதேசங்களை முன்னேற்றுவதில் கவனம் செலுத்தவேண்டும்.

சகல தொகுதிகட்கும் 25 இலட்சம் ரூபா தொகுதி வேலைகளுக்கென வரிப்பணத்தில் இருந்து வழங்கப்படுகிறது. அந்த 25 இலட்சம் ரூபாவையும் சம்பந்தப்பட்ட தொகுதி எம். பி.க்களே எந்த வகையில் செலவு செய்வதெனத் தீர்மானிப்பர். ஆனல் தமிழ் எம். பி.க்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மந்திரிமார்களும் அரசாங்க உத்தியோகத்தர்களும் தம் எண்ணப்படி செலவு செய்ய முற்படுகின்றனர்.

அமைச்சர் . திரு. தேவநாயகம் எனது தொகுதிக்கென ஒதுக்கப்பட்ட 25 இலட்ச ரூபாவிலிருந்து 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவை பாடசாலை ஒன்றுக்கு கட்டிடம் அமைக்கவும் விளையாட்டு மைதானத்திற்கு நிலம் வாங்கவும் எடுத்துக் கொடுக்க முயற்சி நடப்பதாகவும் அறிகிறேன். இதனை நான் அனுமதியேன். அவர் விரும்பினல் எனது தொகுதிக்கு ஒதுக்கிய

போவதற்காக மாவிட்டபுரம்-கீரிமலை வீதி செப்பனிடச் செலவு செய்துவிட்டு அறிவித்தபோது காங்கேசன்துறை எம். பி.யும் எதிர்க்கட்சி முதல்வருமான திரு. அ. அமிர்தலிங்கம் ஆட்பேசனை தெரிவித்தார்.

இதேபோல பல தமிழ்த் தொகுதி நிதிகளை அமைச்சர்களும் அமைச்சு உத்தியோகத்தர்களும் தம் எண்ணப்படி செலவுசெய்யவும் பார்க்கின்றனரேயன்றி எமது பகுதி அபிவிருத்திகளை சிங்கள மாவட்ட அபிவிருத்திகளைப்போல நினைப்பதில்லை.

யாழ். திட்டமிடல் உதவி அதிபர் திரு. சிவதாசனும் பேசினர்.

வெள்ளிவிழா மலரை திரு. சிவதாசனும், வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவும் வெளியிட்டு வைத்தனர்.

விழாமலரை திரு. ரி. சண்முகராசா விமரிசனம் செய்தார்.

## பாராட்டு விழாவில் தலைவர் அமிர்!

ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் சிறப்புக் கட்டுரை வாசித்த திரு. பா. வெ. சாமி (புதுச்சேரி கலக்டர்), பண்டித- புலவர் இரா திருமுருகன் ஆகிய இருவரையும் பாராட்டி 25.5.81ல் புதுச்சேரி தமிழ்ப்பண்பாட்டுக் கழகம் எடுக்கவிருக்கும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி தலைவர் அமிர் அவர்களை மேற்படி கழகம் அழைத்திருக்கிறது.

பாராட்டு விழாவில் முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ.விசுவநாதம், பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் ஆகியோர் கலந்துகொண்டு பேசுகின்றூர்கள்.

## நினைவுக் கல்வெட்டினை கவிஞர் திறந்துவைக்கிருர்

புதுவைமாநிலத்தில் புதுவை மாநிலத் தமிழ் ஈழத் தோழமைக் கழகத்தால் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவிருக்கும் தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணு, பாரதிதாசன் பிறந்த நாள் விழாக்களில் கலந்து கொண்டு அவர்களின் நினைவுக் கல் வெட்டுக்களை கவிஞர் காசி ஆனந்தன் திறந்து வைக்கின்றூர்.

இதற்கான அழைப்பு மேற்படி கழகத்தால் கவிஞருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## உலகத் தமிழரின் உள்ளம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழத் தோழமைக் கழகப் பொதுச் செயலாளர் அரு.கோபாலன், குடிபெயர்ந்தோர் நலவுரிமைச்செயலாளர் ஏ. எஸ். மணவைத்தம்பி, மதுரைமாவீரன் புலவர் அரசுமணி, செயல் வீரர் தென் பாண்டியன், உழைப்புச்செல்வர் முருகவேந்தன், சேவைச் செம்மல் பொ. திருஞானசம்பந்தம் நன்மனக்கோ பொன்மாறன், அஞ்ஞா நெஞ்சன் அஞ்சப்பன், ''பட்டறை'' ஆசிரியர் அகவன், அனல் விவேகானந்தன், வழக்கறிஞர் செல்வராசன், தமிழன்பன், மாணிக்கம், மாறன் மற்றும் பல தோழர்கள் அயராது உழைத்து இக்கண்காட்சியை உருவாக்கி நடத்தினர்.

ஈழத்தைச் சேர்ந்த மதுரை மருத்துவக் கல்லூரி மாணவர் ஞானகுணாளன் அவர்களின் உழைப்பும் உறுதுணையும்தான் இக்கண்காட்சியின்வெற்றிக்கே கடைக்காலாக இருந்தது என்றுல் அது மிகையாகாது. அவருடன் நின்று அரும்பணியாற்றிய மற்றொரு மருத்துவ மாணவர் சந்திரன் அவர்களின் உழைப்பும் சிந்தையை விட்டு அகலாத ஒன்ருகும்.


மதுரை யாதவர் கல்லூரி முதல்வர் பேராசிரியர் தமிழ்க் குடிமகன் 'தமிழ்பணி' பொறுப்பாசிரியர் பெருங்கவிக்கோ, டாக்டர் வா. மு. சேதுராமன் ஆகியோரும் இக்கண்காட்சியின் வெற்றிக்குப் பல்லாற்றுனும் துணையாக நின்றனர்.

உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்தும்,, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மதுரை மாநாட்டுக்கு வருகை தந்த பெருமக்களில் குறிப்பிடத்தகுந்தோரெல்லாம் இக்கண்காட்சியை வந்து பார்த்தனர்.

(நன்றி--'மர்மம்')



# விடுதலையைத் தேடி...



குறுங் காவியம்



## செந்தேன் செய்தி!

காடுதனில் உறுமும் ஒரு
கொடும்புலியைப் பிடித்துத் தம்
கூடுதனில் அடைத் திட்டார்!
கொஞ்சநாட் கழிந் ததுமே
காடுதனில் பாயும் அது
காட்டாற்று வெள்ளம் போல்!
நாடு அரசாள் வோர்க்கு
நரம்பெல்லாம் தளர்ந்தே போம்!

ஏடு எலாம் இதைப்பற்றி
எழுத்துக்கள்! இரவு பகல்
தேடும் புலி வேட்டை நம்
தேசத்தில் தினந் தோறும்
வீடு எலாம் வெறிநாய்கள்
விருப்பம் போல் அதிகாரம்...
மாடு தோல் போர்த்த புலி
மரணந்தான் பரி சென்பார்!

கடுங் குற்ற வாளியவன்
கள்ளர் பெருங் கூட்டத்தின்
நெடுநாளைத் தலைவ னவன்
நிகழ்ந்த பல கொலை யெல்லாம்
படுபாவி தான் செய்தான்
பயமில்லாப் பேயே தான்
சுடும்நாளே திரு நாளாம்
சொல்லவில்லை! செயலே தான்!

பொது சனப் பகைவ னவன்!
போய்ப் பிடித்துத் தருவோர்க்கு
புதுவிதப் பரிசுண்டு
பொற்கிழியும் தருவோம் நாம்!
மதுபோல வெறி யேற்றும்
மனிதனவன் அழியும் நாள்
புது ஆண்டே! கொண்டாட்டம்!
பூமியிலே நமக் கெல்லாம்!

பிடித்தல் பெருங் கஷ்டமென
பின் நிற்போர், துவக்காலே
முடித்திடுவீர் அவன் மூச்சை!
முழுப் பரிசும் பெற்றிடுவீர்!
அடித்துவிட்டு வர வேண்டாம்
அவன் கெட்ட பாம்பன்றே!
கடித்தொழிக்கத் தருணமதைக்
கயவனவன் பார்த்திருப்பான்!

வேட்டையிலே ஈடுபட்ட
வெறிநாய்கள் ஆத்திரத்தால்
மூட்டையினை உதறிவிட்ட
முதலில்லாச் சொற்கள் இவை!
மாட்டுத்தோல் மனிதரிவர்
மானமென்ன விலை யென்பார்!
கூட்டமிது அழிந்தால்தான்
குலம் வாழும்! தமிழ் வாழும்!

பத்திரிகை யாவும் அவன்
படம் போடும் முன்பக்கம்!
சித்தரித்துச் செய்தி பல
சிறப்பிதழே வெளியாகும்
கத்தரித்து அவன் படத்தைக்
கைவசமே வைத்திருப்போர்
பத்தாயிரம் ரூபாய் எனும்
பசிக்கு இரை யானவரே!

சுவரெல்லாம் அவன் படமே!
துரோகி என ஒரு பட்டம்
கவனமெலாம் இழுத்தெடுக்கும்
காளையவன் விபரங்கள்
புவனமெல்லாம் இச்செய்தி
புரிந்தவர்கள் மகிழ்ந்தோராய்
சிவப்பு விளக் கெரியு தென்பார்
சிறீலங்கா நாட்டினிலே!

இரும்பு எனச் சிறைச்சாலை
இருந்தாலும் இளங்குமரன்
துரும்பு என நிரூபித்தான்
துணிவென்றுல் அவனேதான்
கரும்பு எனச் செய்தி இது
கன்னி அவள் காதில் விழும்
அரும்பு எனக் குவிந்த முகம்
அடடாவோ! பூத்ததடா!

(வளரும்)

**கவிஞர் வாகரைவாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் நிகழ்வதுபோல இலங்கை அரசு மாவட்ட சபையைக் கலைக்க முடியாது!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களிலே பெருந்தொகையான வேறுபாடுகள் இடம் பெறமுடியும்.

யதார்த்தத்தில் மாவட்ட அமைச்சர் ஒருவரின் நிலை இந்திய இணைப்பாட்சியிலுள்ள மாகாண அரசு ஒன்றின் ஆளுனரின் நிலையைச் சில அம்சங்களில்ஒத்திருக்கின்றது. அரசாங்கத்தின் பொதுக்கொள்கை ஒன்றை மாவட்டத்திற்செயற்படுத்துவது தொடர்பில் தமக்கும் சபையின் நிறைவேற்றுக் குழுவுக்கு மிடையே ஏற்படக்கூடிய ஏதேனும் கருத்து வேறுபாடுகளை மாவட்ட அமைச்சர் சனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டும் என்று மாவட்ட அபிவிருத்திச்சபைச் சட்டத்தின் 61 (1) ஆம் பிரிவு கூறுகின்றது. அத்தகைய கருத்து வேறுபாடுகள் தீர்த்து வைக்கக்கூடியன வல்ல என்று சனாதிபதிக்குத் தோன்றும் சந்தர்ப்பத்தில் அவர் அத்தகைய நிறைவேற்றுக் குழுவைக் கலைக்கலாம் என 61 (2) ஆம் பிரிவு கூறுகிறது.

**✲ அபிவிருத்திச் சபையின் அச்சாணி.**

ஆயினும், மாவட்ட அபிவிருத்திச் சபை அமைப்பு அனைத்தினதும் அச்சாணியாக விளங்குவது 31 (1) ஆம் பிரிவின் காப்பு வாசகமும் 31 (4) ஆம் பிரிவும் ஆகும். கலைக்கப்பட்ட நிறைவேற்றுக் குழுவிற்குப் பதிலாக புதிய ஒரு நிறைவேற்றுக் குழுவை நிறுவவேண்டிய மாவட்ட அமைச்சர் அப்புதிய நிறைவேற்றுக் குழுவை அபிவிருத்திச் சபையின் நம்பிக்கைக்குரிய ஒன்றாக அமைத்தல் வேண்டும் என்று 31 (1) பிரிவின் காப்புவாசகம் கூறுகிறது. நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர் கூட்டாகவும், தனித்தும் மாவட்ட சபைக்குப் பதிலிறுக்க வேண்டியவர்களாக யிருத்தல் வேண்டும் என்று 31 (4) ஆம் பிரிவு கூறுகிறது. மாவட்ட அமைச்சர் மாவட்ட அபிவிருத்திச் சபையின் தலைவருடன் கலந்தாலோசித்தும் இலங்கை சனாதிபதியின் ஒருப்பாட்டுடனும் நிறைவேற்றுக் குழுவின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் கடமைகளைக் குறித்தொதுக்க வேண்டும் என்று 31 (2) ஆம் பிரிவு கூறுகிறது. எனவே, நிறைவேற்றுக்குழு உறுப்பினர் மாவட்டத்தில் அமைச்சரவை உறுப்பினர் போலாகின்றனர். நடைமுறையில்'அமைச்சரவை அரசாங்கமும்', 'கூட்டுப் பொறுப்பும்' என்ற கோட்பாடுகள் மாவட்ட மட்டத்திலும் பிரதி பண்ணப்படுகின்றன.

**✲ இந்திய அரசியலமைப்பில் மாநில அரசு**

இந்திய அரசியலமைப்பின் கீழ் மாகாண அரசுகளினால் நிறைவேற்றப்படும் சட்ட மூலங்கள் ஆளுநர்க்குச் சமர்ப்பிக்கப்படும் பொழுது அவர் அவற்றுக்குத் தமது இசைவை மறுக்கலாம் அல்லது மீண்டும் பரிசீலிக்கும்படி திருப்பியனுப்பலாம். அல்லது இந்திய சனாதிபதியின் பரிசீலனைக்கு ஒதுக்கலாம். மேலும், எந்த ஒரு மாகாண அரசிலும் அரசியலமைப்பின் ஏற்பாடுகள் திருப்திகரமாகத் தொழிற்பட முடியாதசூழ்நிலைகளில் அங்கே அவசர நிலை ஒன்றைப் பிரகடனப் படுத்த இந்திய அரசியலமைப்பு வகைசெய்கின்றது. அத்தகைய மாகாண அரசைப் பிரதமரின் ஆலோசனை மீது சனாதிபதியின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவர சனாதிபதிக்கு இந்திய அரசியலமைப்பின் 356ம் வாசகம்அனுமதியளிக்கின்றது. இந்தச்சந்தர்ப்பத்தில் ஆளுநர் சனாதிபதியின் பேரில் உச்ச நிலை அதிகாரங்களைப் பிரயோகிக்கிறார்: அப்பொழுது ஆளுநருக்குரிய அதிகாரங்கள் எத்துணை பிரமாண்டமானவை என்பதைப் பேராசிரியர் ஜே. பி. சூதா 1951 இல் கூறிவைத்தார். ''அவசர நிலையைப் பிரகடனப்படுத்தி சனாதிபதி இந்தியாவின் இணைப்பாட்சி அரசியலமைப்பை ஒற்றையாட்சி அமைப்பொன்றாக மாற்றிவிட முடியும்''. அரசியலமைப்பின் இந்த 356ம் வாசகம் பற்பல இந்திய மாகாண அரசுகளில் பலசந்தர்ப்பங்களில் தொழிற்படுத்தப் பட்டிருக்கின்றது.

இதே போன்ற ஏற்பாடுகள் மலேசியா இணைப்பாட்சி அரசியலமைப்பின் 150 (4) ஆம் 5 ஆம் வாசகங்களில் இருக்கின்றன. 150 (4) ஆம் வாசகம் பின்வருமாறு:-

''அவசரநிலைப் பிரகடனம் ஒன்று தொழிற்படும் போது இவ்வரசியலமைப்பி லுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், மத்தியஅரசின் நிறைவேற்று அதிகாரம் மகாண அரசுக்குரிய சட்டவாக்கஅதிகாரத்துக்குட்பட்ட எந்த விடயத்துக்கும் நீடிக்கவும் எந்த ஒரு அரசுக்கோ அதன் அலுவலருக்கோ அதிகார பீடத்துக்கோ கட்டளைகள் இடவும் முடியும்.''

150 (5) ஆம் வாசகம் கூறுவது இது:-

''அவசரநிலைப்பிரகடனம் ஒன்று தொழிற்படும் போது இணைப்பரசின் பாராளுமன்றம், இவ்வரசியலமைப்பின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், (முஸ்லிம் சட்டமோ, மலாய் மக்களின் பழக்க வழக்கமோ தவிர்த்து) மாகாண அரசுக்கு ஒதுக்கிய எந்த விடயம் மீதும் சட்டமாக்கலாம். பாராளுமன்றத்தினதோ மாகாண அரசின் சட்டவாக்க மன்றினதோ ஆட்சிக்காலத்தை நீடிக்கலாம், தேர்தல் ஒன்றைநிறுத்திவைக்கலாம். இவ்வாசகத்தின் நோக்கங்கள் தொடர்பில் ஆக்கப்பட்ட ஏதேனும் ஏற்பாடு விளைவான அல்லது இடைநேர் விளைவான ஏற்பாடு எதனையும் ஆக்கலாம்''.

இதைவிட, இந்திய மலேசிய இணைப்பரசுகளில் மத்தியஅரசு மாகாண அரசுகளைப் பல்வேறு வழிகளில் வலுக்கட்டாயப் படுத்தி தாம் விரும்பிய வகைகளில் ஆட்டிப் படைக்கலாம். இந்தியாவில் பொருளாதார அபிவிருத்தியென்பது மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு விடயம். இந்திய அரசியல் ஏற்பாட்டு விவகாரங்களில் ஒரு விற்பன்னராகிய ஆங்கிலேயரான பேராசிரியர் டபிள்யூ. எச். மொறிஸ் ஜோன்ஸ் என்பார், **''இந்தியாவின் அரசாங்கமும் அரசியலும்''** என்ற நூலில் ''அரசாங்கப் பொருளாதார வேலைத்திட்டங்களில் பலமிக்க மத்திய பணிப்புரையை உறுதிப்படுத்தும் அரசியலமைப்புக் கருவியே திரு. நேரு 1950ல் நிறுவிய மத்திய திட்டமிடல் ஆணைக்குழு'' என்று கூறியுள்ளார். இந்தியாவின் பிரதம அமைச்சரைத் தலைவராகக்கொண்டுமாகாண அரசுகள் அனைத்தினதும் முதலமைச்சர்கள், திட்டமிடலாணைக்குழு உறுப்பினர் என்பாரைக் கொண்டு உயர் அதிகாரம் கொண்ட தேசிய அபிவிருத்திச்சபை ஒன்று 1952இல் நிறுவப்பட்டது. மெல்ல, மெல்ல இந்தச் சபை பெருமளவு அதிகாரங்களைத் தனதாக்கிக் கொண்டு விட்டது. இந்த நிலைமை பற்றி இந்திய நிதியாணைக்குழு உறுப்பினர்களுள் ஒருவரான திரு. கே. சந்தானம் 1960இல் பின்வருமாறு குறிப்பிட்டார். ''தேசிய அபிவிருத்திச் சபையின் நிலைமை இந்திய அரசாங்கத்துக்கெனவும் மாகாண அரசாங்கங்கள் அனைத்துக்கெனவும் இயங்கும் ஓர் அமைச்சரவையாகி இந்திய இணைப்பாட்சிஅமைப்பு அனைத்தையுமே ஊடுருவி நிற்கும் ஓர் உயரமைச்சரவை நிலையை ஏறத்தாழஅடைந்துவிட்டது''

**✲ மலேசிய அரசியலமைப்பில் மாநில அரசு**

மலேசியாவிலிருக்கும் நிலபரமும் அநேகமாக இதேபோலத் தான், மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்குமிடையே யான அதிகாரப் பங்கீட்டில் தேசிய பொருளாதார அபிவிருத்தி மலேசிய மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட விடயம். பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் மத்திய அரசு மாகாண அரசுகள் அனுபவிக்கும் அதிகாரங்களில் தலையிடுவதற்கு இந்த அதிகாரங்களைப் பிரயோகித்திருக்கின்றது. இந்திய இணைப்பாட்சி அரசியலில் இருப்பது போல மலேசிய இணைப்பாட்சிஅரசியலும் மலேசியப் பிரதம அமைச்சர், மத்திய நிதி அமைச்சர், மாகாண அரசுகள் அனைத்தினதும் முதலமைச்சர்கள் ஆகியோரைக் கொண்ட தேசிய நிதிச்சபை ஒன்றுண்டு.

இந்தியா, மலேசியா ஆகிய இருஉதாரணங்களும் இலங்கை மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தொடர்பில் பெறுமதி மிக்க இரண்டு கருத்துணர்வுகளைத் தெரியவைக்கின்றன. அதாவது, இரு நாடுகளிலும் நடைமுறையில் மத்திய அரசாங்கங்களுக்கு எல்லையில்லாத அதிகாரங்கள் இருந்த போதிலும் **''பேரம்பேசும் இணைப்பாட்சி'' ''ஒத்துழைப்பு இணைப்பாட்சி''** என தாம் பெயரிட விரும்பும் இரு செயற்பாட்டு முறைகளைத் துலக்கிக் காட்டியிருக்கிறார்கள். யதார்த்தமான அரசியலில் மத்திய அரசுகளும் மாகாண அரசுகளும் முறையே தத்தம் அதிகாரங்களை அரசியலமைப்பு ஏற்பாடுகளில் கூறப்பட்டிருக்கும் சொற்கோவைகளுக்கு அமைய இரும்புப் பெட்டிகளுக்குள் நின்று தொழிற்படுத்துவதில்லை என்பதுதான் இதன் பொருள். அவ்வாறு சொற்கோவைக் கருத்துக்களுடன் ஒட்டி இயங்குவதுதானென்றால் மேற்கு நாடுகளின் இணைப்பாட்சி முறைகள் உட்பட உலகில் எந்த இணைப்பாட்சி முறையும் இயங்கவே முடியாது. யதார்த்தம் இதுதான். அதாவது மத்திய அரசாங்கங்களுக்கு முழு நிறைவான நிதியதிகாரங்கள்உண்டு. இது காரணமாக அவை தமது கொள்கைகளை நிறைவேற்றும் படி மகாண அரசுகளை நிர்ப்பந்திக்கக்கூடிய வாய்ப்பான நிலையிலிருக்கின்றன. இருந்தும் விடயத்துக்கு வரும்போது மத்திய அரசுக்கும் மாகாண அரசுகளுக்குமிடையே விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளும் நிலபரம் பெருமளவில் உண்டு. எனவே, வெற்றியாக அமையும் எந்த ஒரு இணைப்பாட்சி முறையிலும் ''பேரம் பேசுவதும்'' ''ஒத்துழைப்பதும்'' இரு அடிப்படைக் கோட்பாடுகளாகும்.

**✲ மாவட்ட சபையும் மத்திய அரசும்**

இந்த இரு அம்சங்களுக்குமான கருவிகள் இலங்கை மாவட்ட அபிவிருத்திச்சபை முறையில் உண்டு. இந்த அமைப்பு தகுந்தவழியில்இயங்குவதற்கான திறவுகோல் மாவட்டஅமைச்சரவையாகிய நிறைவேற்றுக் குழுக்களில் உண்டு. இந்திய, மலேசிய இணைப்பாட்சியில் நிகழ்வது போல இலங்கையில் மத்திய அரசாங்கம் தன்மனம் போன போக்கில் நிறைவேற்றக் குழுக்களைக் கலைத்துவிட இயலாது. ஏலவே கூறியது போல நிறைவேற்றுக் குழுவுக்கும் மாவட்ட அமைச்சருக்குமிடையே யான தீராத வேறுபாடுகள் காரணமாக சனாதிபதி நிறைவேற்றுக் குழுவைக்கலைத்தால் மாவட்ட அமைச்சர் வேறொரு நிறைவேற்றுக் குழுவை அமைக்க வேண்டும். ஆனால் இந்தப்புதிய நிறைவேற்றுக்குழு மாவட்ட அபிவிருத்திச்சபையின் நம்பிக்கையைப் பெற்றதாக இருத்தல் வேண்டும். மேலும், அவசர நிலை ஒன்று பிரகடனப்படுத்தினால் இந்தியாவிலோ மலேசியாவிலோ நிகழ்வதுபோல மாவட்ட அபிவிருத்திச்சபையை அகற்றி மத்திய அரசு அதன் இடத்தில் அமர்ந்து கொள்வதற்கு மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்டத்தில் எவ்வித ஏற்பாடும்இல்லை. சட்டத்தின் 63 (1) ஆம் பிரிவில் வகுத்திருப்பதற்கமைய **இன்னின்ன என்று எடுத்துக்கூறப்படும் காரணங்கள் மீதே மாவட்ட அபிவி**ருத்திச் சபை ஒன்று கலைக்கப்படலாம். அவையாவன, தகுதியின்மை, தவறான முகாமை, கடமைகளை நிறைவேற்றத்தவறுதலும் அதில் அசட்டையும் அதிகாரத்துஷ்பிரயோகம் என்பவையாகும். இருந்தும் கூட மாவட்ட அபிவிருத்திச் சபை அத்தகைய குற்றங்களைஇழைத்துள்ளது என்று விடயத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சர் கருதியதும் அவர் சபையைக் கலைத்துவிட முடியாது. 63 (2) ஆம் பிரிவின்படி அவர் இளைப்பாறிய நீதி அலுவலர் ஒருவர் மூலம் சபையின் விவகாரங்கள் மீது விசாரணை நடத்த வேண்டும்.; தலைவரையோ, தெரிவு செய்யப்பட்ட உறுப்பினருள் ஒருவரையோ, உறுப்பினர் அனைவரையுமோ அகற்றுவதற்கானகட்டளையை நாட்டு விவகாரங்களை, விவாதங்களில் கீறிக்கிழிக்கும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மத்திய அரசாங்கம் தனது இந்த அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதற்கெதிராக இருக்கும் இந்தப் பாதுகாப்புகள் எதுவுமே இந்திய, மலேசிய மாகாண அரசுகளுக்கு இல்லை.

எனவே, அந்நாடுகளிலுள்ள மாகாண அரசுகளைப் போலில்லாது மாவட்ட அபிவிருத்திச்சபைகளின் நிறைவேற்றுக் குழுக்கள் மத்திய அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்கோ, பேரம்பேசுவதற்கோ வலிமைகூடிய நிலையிலிருக்கின்றன. விவசாயம், கூட்டுறவு அபிவிருத்தி, கலாச்சார விவகாரங்கள், கல்வி, வேலைவாய்ப்பு, கடற்றொழில், சுகாதாரம், உணவு, வீடமைப்பு, காணிப் பயன்பாடும் காணி அபிவிருத்தியும், கிராம அபிவிருத்தி, சிறிய நடுத்தரக் கைத்தொழில்கள் போன்ற பலவகைப்பட்ட விடயங்கள் தொடர்பில் திட்டமிடுதற்கான பொறுப்பை 39 முதல் 43 வரையிலான பிரிவுகள் நிறைவேற்றுக்குழு மீதும், மாவட்ட அபிவிருத்திச்சபை மீதும் சுமத்துகின்றன. மாவட்ட அபிவிருத்திச்சபைகளுக்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சரும்(இப்பொழுது உள்ளூராட்சி அமைச்சருமாக இருக்கும் பிரதமர்) மத்திய

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மண் காக்கும்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தின் ஏனைய இது தொடர்பான அமைச்சர்களும் மாவட்ட அபிவிருத்திச்சபை வகுக்கும்திட்டங்களைவெட்டிக் குறைக்க, மாற்ற, திருத்த அதிகாரமுடையர் என்பது உண்மைதான். ஆனால், இந்திய, மலேசிய இணைப் பாட்சி அரசுகளிலும் மத்திய அரசாங்கங்களுக்கு இத்தகைய அதிகாரங்கள் உண்டு. இலங்கையில் மத்திய அரசாங்கத் திடமிருந்து அங்கீகாரத் தையும், நிதியையும் பெற்றுக் கொள்வதற்கு பேரம் பேசுவதும் ஒத்துழைப்பதும் தலைவருக்கும், நிறைவேற்றுக்குழுவுக்குமான பொறுப்பாகும். "இந்தியாவின் அரசாங்கமும் அரசியலும்" என்ற தமது நூலில் பேராசிரியர் டபிள்யூ. எச். மொறிஸ் ஜோன்ஸ் இது பற்றி இந்தியா தொடர்பில் பின்வருமாறு கூறியிருக்கிறார்:-

"மாகாண அரசின் அமைச்சர் ஒவ்வொருவருக்கும் மத்திய அரசிலிருக்கும் பொருத்தமுடைய அமைச்சருடன் உத்தியோகபூர்வத் தொடர்புகள் இருக்கவே இருக்கும். தம்முடைய கோரிக்கைகளை வற்புறுத்துவதில் சில அமைச்சர்கள் ஏனைய அமைச்சர்களிலும் பார்க்கப் பயன்காணும் திறமையுடையவராயிருப்பர். இருந்தும் மத்திய அரசுடனான உறவுகளில் பெரும்பாலான மாகாண அரசுகளில் முதலமைச்சரே பிரதான ஆளாக விளங்குவர். முதலமைச்சரின் அமைச்சர்களும், அதிகாரிகளும் வேண்டிய அளவு புதுடில்லிக்குப் போவதும் வருவதுமாக இருப்பார்கள். ஆனாலும், அவர்களின் கஷ்டங்களும், அவர்கள் ஆற்றிமுடிக்காத காத்திரமான விஷயங்களும் புதுடில்லியில் எடுத்துப் பேசப்படும் பொருட்டு முதலமைச்சரின் கோவையிற் சேர்ந்து திரளும்."

மேலேயுள்ள பந்தியில் மாகாண அரசின் அமைச்சருக்குப் பதிலாக நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ஒருவர் என்றும முதலமைச்சருக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திச்சபையின் தலைவர் என்றும் நாம் பதிலீடு செய்து வாசித்துக்கொள்ளலாம்.

பேரம்பேசுதல், ஒத்துழைத்தல், சமரசம் காணல் என்பவற்றிற்கான வாய்ப்புக்கள் மாவட்ட அபிவிருத்திச்சபைச் சட்டத்தின் பிறபிரிவுகளிலும் உண்டு. 26ஆம்பிரிவு மாவட்ட அபிவிருத்திச்சபை ஒன்றுக்கு நிதி ஒதுக்க அமைச்சரவைக்கு அதிகாரம் வழங்குகின்றது. கொள்வதும், கொடுப்பதும் என்ற சமரச உணர்ச்சி இருந்தால் மாத்திரமே நிதியைப் பெறலாம். 27-ஆம், 30-ஆம் பிரிவுகளின் கீழ் மாவட்ட அபிவிருத்திச் சபைக்குக் கடன் திரட்டும் அதிகாரம் உண்டு. ஆனால், இதனை மாவட்ட அபிவிருத்திச்சபைக்குப் பொறுப்பாயிருக்கும் அமைச்சரும் நிதியமைச்சரும் அங்கீகரிக்க வேண்டும். இந்த நிலபரத்தில் அமைச்சர்களை இசைவிப்பதும், ஒத்துழைத்துப் பேரம்பேசுவதும் நிறைவேற்றுக்குழுவினதும் தலைவரினதும் பொறுப்பாகும். மாவட்டம் ஒன்றின் உயிர்நாடி அதிகாரியாகிய மாவட்டச் செயலாளரை நியமிப்பதற்கு இலங்கை ஜனாதிபதிக்கு 48-ஆம் பிரிவு அதிகாரம் வழங்குகின்றது. எனினும், ஜனாதிபதி தான் தேவையெனக் கருதும் இடத்தில் இந்த உயர்நிலை நியமனத்தைச் செய்யும்போது மாவட்ட அபிவிருத்திச்சபையின் தலைவருடன் கலந்தாலோசிக்கலாம் என்றும் கூறுகின்றது. ஆனால், கைவண்ணம் மிக்க தலைவர் ஒருவர் தான் விரும்பும் ஒருவரை நியமிப்பதற்கு ஜனாதிபதியை இசைய வைக்க முடியும். ஆயினும், மாவட்டச் செயலாளர் தலைவருக்கு ஏற்புடைய ஒருவராயில்லாதிருந்தாலும்கூட சட்டத்தின்48 (1) ஆம் பிரிவின்படி அவர் நிறைவேற்றுக்குழுவின் பணிப்புரைகட்கு உட்படவேண்டியவரே யாவர். கடைசியாக மாவட்ட அமைச்சர் ஒருவர் நியமனம் பற்றிய விடயம் ஒன்று உண்டு. மாவட்ட அமைச்சர்கள் உட்பட அமைச்சர்களை நியமிப்பது அரசியலமைப்பின் பிரகாரம் இலங்கை ஜனாதிபதியின் தனியுரிமைக்கும், தனையற்ற தற்றுணிபுக்கும் உரிய ஒரு விடயம். மாவட்ட அபிவிருத்திச்சபையும் அதன் தலைவரும் இதிற்கூட கவனமும், சாதுரியமும் கொண்ட இணக்கப் பேச்சுவார்த்தைமூலம் சபைக்கு ஏற்புடைய மாவட்ட அமைச்சர் ஒருவரைக் கைவசப்படுத்திக்கொள்ளலாம். தோதான ஒரு மாவட்ட அமைச்சரைப் பெற்றுக்கொவதில் தேவையான ஒத்துழைப்பைக் கொடுப்பது மாவட்ட அபிவிருத்திச்சபையினதும், அதன் தலைவரினதும் பொறுப்பாகின்றது. மாவட்ட அபிவிருத்திச்சபை என்ற இந்தப் புதிய முறையிலுள்ள அரசியல் அத்தகைய அமைச்சா ஒருவரைத் தகுந்தபடி தெரிந்தெடுத்துக்கொள்ளவதற்குத் தேவைப்படும் வாய்ப்பை உண்மையில் வழங்குகின்றது.

## தனித்துவம்மிக்க அமைப்பு!

எனவே, மாவட்ட அபிவிருத்திச்சபை என்ற முறை பற்றி நான் இங்கு காட்டிய பொருள் விளக்கத்திலிருந்து பின்வரும் முடிபுகளைக் கூற முடியும்.

(1) அரசியல் விஞ்ஞானத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபை முறையை இது இன்ன என்று வகைப்படுத்திக் கூறுவது சுலபமல்ல. இணைப்பாட்சி முறையில் குணதிசயங்கள் சிலவற்றை இந்த முறை உள்ளடக்கியிருந்தபோதிலும் இது ஒரு இணைப்பாட்சி முறையல்ல. சில வகைகளில் உதாரணத்துக்கு எடுக்கப்படும் இந்திய மலேசியா இணைப்பாட்சிக என ஒருவர் வாதிடலாம். ஆயினும், இந்திய மலேசிய இணைப்பாட்சி அமைப்புகளின் அன்றாட தொழிற்பாட்டை நெருங்கிக்கவனித்தால் அங்கும் இதுவேதான் நிலைமை, என்பது பெருமளவு உண்மை. நிதியுதவிக்காகத் தமது மத்திய அரசுகளில் மாகாண அரசுகள்வர வரக்கூடிய அளவு தங்கியிருப்பதனால் பழமையான இணைப்பாட்சி அரசுகளிலும் இதுதான் உண்மைநிலை.

(3) இரு தரப்பிலும் பெருமளவு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, பலபேரங்கள் பல சமரசங்கள் என்பன இடம்பெறும் என்ற ளிலுள்ள அரசுகளுக்கு இருப்பதில்பார்க்க மாவட்ட அபிவிருத்திச்சபைக்கு நற்பயன்கள் கூடிய அளவில் உண்டு என்பதினாலும், இந்த முறை இணைப்பாட்சி முறையல்ல. அரைகுறை இணைப்பாட்சி முறயிலும் பார்க்க இதனைப் தரமுயர்ந்ததாக்கும் அம்சங்களை இது கொண்டிருப்பதாகக் கூறக்கூடியபடியால் இது அரைகுறை இணைப்பாட்சி முறையுமல்ல.

(2) இந்த முறையை ஒற்றையாட்சி முறை என்றும் கூற முடியாது. சட்டபூர்வமாகவும், அரசியலமைப்பு ரீதியிலும் மத்திய அரசுக்கே ஈற்றில் இறுதியதிகாரம் உண்டு அனுமானத்தின் மீது உருவாக்கப்பட்ட திட்டவட்டமான அகவமைப்புக்கள் இந்த ஏற்பாட்டிலுண்டு. இத்தகைய அமைப்புமுறையொன்றில் ஆசாரம் நிறைந்தமரபுகளை காலஓட்டத்தில் பரிணமிக்க வைப்பதன் மூலம் பழைய உன்னதத் தன்மை கொண்ட விறைப்பான இணைப்பாட்சியமைப்பொன்றின்குணதிசயங்களை இது வளர்த்துக்கொள்ள முடியும். ஆகவே. மாவட்ட அபிவிருத்திச்சபை தன்னையொத்த இன்னொன்றில்லாத ஒரு தனி அமைப்பு.

(4) ஏற்றமுறையில் இந்த அமைப்பைத் தொழிற்படுத்தினால் தமிழ்மொழியையும், பண்பாட்டையும் பேணிப் பாதுகாத்தும், அரசாங்க சேவையில் தங்கியிருப்பதைக் குறைத்துக்கொள்ளக் கூடிய வகையிலும் தமது அன்றாடச் சீவனோபாயத்தை நாடிச் சிங்கள மாகாணங்களுக்கு இடம்பெயரும் உளப்பாங்கைக் குறைத்துக்கொள்ளக்கூடிய வகையிலும் தமிழ்பேசும் மக்களின் பொருளாதாரத்தைவளம்படுத்தியும், கருத்துள்ள தனியான வாழ்வு ஒன்றின் நற்பயன்களை இந்த அமைப்பு தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியும். தமதுபாரம்பரியத் தாயகத்தை மாற்றார் ஊடுருவலிருந்து பாதுகாக்கவும் இவ்வமைப்பு வழிவகுக்கும். நடைமுறையில் இந்த அமைப்பு தன்னைப் போல் இன்னொன்றில்லாத தனி விசேடம் வாய்ந்தது. ஏனெனில், சிங்கள மக்களோடு தன்னுறுதியுடன் கூடியசமாதான சகவாழ்வைத் தமிழ் மக்கக்களுக்கு இயலுவதாக்கக்கூடிய வகையில் இதைத் தொழிலாற்ற வைக்கமுடியும்.

## நெஞ்சம் நிறைந்த நன்றி!

'உதயசூரியன்' சார்பில், த. வி. கூட்டணிச் செயலகத்தில் பணியாற்றும் திரு. கி. திருவருள் அவர்கள் கொழும்புக்கு வந்தபோது, 'பத்திரிகையின் வளர்ச்சிக்காக, விளம்பரங்கள்' சந்தாக்கள் தந்து உதவிய அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் - குறிப்பாக திரு. ந. யோகலிங்கம், திரு. இ. இலட்சுமிகாந்தன் ஆகியோருக்கு எமது வெளியீட்டகத்தின் சார்பில் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— விளம்பரங்கள் தொடர்ந்து வெளியிடப்படும் —

-- பத்திரிகைக் குழுவினர் --

## 90 மாணவர்களுக்கு ஒரேயொரு ஆசிரியர்!

மட்டக்களப்புத்தொகுதியில் உள்ள விளா வெட்டுவான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் பாலர் முதல் ஐந்தாம் வகுப்புவரை மொத்தம் 90 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். இவர்களுக்கு ஒரே ஒரு ஆசிரியர்தான் படிப்பிக்கின்றார்.

இத்தகைய அவல நிலையில் உள்ள பாடசாலையை மந்திரி இராசதுரை திரும்பிக் கூடப் பார்க்கின்றாரில்லையே என்று பொதுமக்கள் ஆத்திரத்துடன் பேசுகிறார்கள்.

## கலைஞர் கருணாநிதி ஈழம் வருவார்?

தந்தை செல்வாவின் நினைவு தினத்தை (26-4-81) ஒட்டி தமிழீழத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தந்தை செல்வா அறங்காவல் குழுவின்சார்பாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதிக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கின்றது.

இலங்கை அரசு அனுமதிக்குமானால் அழைப்பை ஏற்று கலைஞர் ஈழத்திற்கு வருகைதருவார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

## கிழக்கு சிவக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்லாமிய உடன் பிறப்புக்களும் தமிழர்களோடு தோளோடு தோள் நின்று- பச்சை இனவாத யு. என். பியை பாடையிலே ஏற்றி வைக்கப் போகும் இனிய காட்சி வெகு விரைவிலேயே கிழக்கிலங்கையில் நடைபெறப்போகின்றது.

தமிழர் பூமியில் ஓர் அங்குலத்தைத் தானும் தமிழினப் பகைவர்கள் ஆளவே விடக்கூடாது என்ற வேட்கையோடு கிழக்கிலங்கையில் அணிதிரண்டிருக்கும் தமிழீழத் தேசிய வாதிகளைக் கண்டு அஞ்சி நடுங்கும் சுயநலக் கும்பல்- சூழ்ச்சிகளையும் சதிகளையும் தேடி அலைவதாகத் தெரிகின்றது.

அவர்களின் இந்த குறுக்கு வழிகள் அத்தனையும் முறியடிக்கப்படும் என்பதில் ஐயமேயில்லை-அதன் அடையாளம் தான் கீழ்வானத்தின் செந்நிறத் தோற்றம்.

தென்னகத்தில் மிகுந்த பரபரப்பையூட்டி
வெற்றிவிழாக் கொண்டாடிய
"வெள்ளி விழா" வண்ணச் சித்திரம்
சாந்தி -(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
காலை 10-30, பி. ப. 2-15, 6-00,
இரவு 9-30
சரத்பாபு, சுமலதா, சுந்தரராஜன்
எம். என். ராஜம்
ஆகியோர் நடித்த
பி. எஸ். வீரப்பா அளிக்கும்....
திசை மாறிய பறவைகள்
(முற்றிலும் மாறுபட்ட, திசை திருப்பமான கதை)

உதயசூரியன் வெளியீட்டகத்தால் தயாரிக்கப்பட்டுயாழ்.புனித வளன் கத்தோலிக்கஅச்சகத்தில் 3-4-81ல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org